குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 47] பிரபவ ஆண்டு மாசித்திங்கள் 10-3-88 [இதழ் 4



திருவாரூர்

அருள்மிகு

தியாகராஜர்

திருக்கோயில்

திருக்குடமுழுக்குப்

பெருவிழா

4—4—1988

திங்கட்கிழமை

நிகழ இருப்பதை முன்னிட்

ஸ்ரீ தியாகராஜ சுவா

அருள் வழங்கும் காட்

இவ்விதழை

அலங்கரிக்கின்றது

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்தசுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

பெறுவானும் பேறுநான்
பெம்மானுள் ளுண்டேல்
அறிவாயோ வாநந்த
மன்றி — யறிவேனுன்
ஆனந்தங் காட்டி
யகத்திருப்ப னுகிலநு
மானந்தான் கண்டறியாய் மற்று.

— முத்திநிச்சயம் 6

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 47 | 10-3-88 | இதழ் 4

உட்பொருள்

எண்		பக்கம்
1	திருவாரூர்த் தியாகேசர் திருக்கோயில் குடமுழுக்குக் காணவாரீர்! ...	169
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய அருளுரை ...	174
3	''அபிராமி அந்தாதி ஆராய்ச்சி'' ஓர் அநுபவம்! ...	179
4	கல்வி யுகத்திற்குத் தமிழ் (2) ...	183
5	வருவாய் நீ! முருகா!	185
6	அபிராமி அந்தாதி ...	187
7	போதமும் சித்தியும் ...	190
8	மேலைநாட்டுத் தத்துவ மேதைகள் —	193
9	திருவேணி சங்கமத்தில் சரஸ்வதி நதி ...	198
10	திருமுறைகளில் மன வலிமை ...	199
11	திருமூலர் ...	205
12	செய்திகள் ...	210
13	கடிதம் ...	212
14	எதிர்காலம் ...	213
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி IV. பாடம்-2. ...	217

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 47 ★ இதழ் 4

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரபவ மாசி 10—3—1988

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருவாரூர்த் தியாகேசர் திருக்கோயில் குடமுழுக்குக் காணவாரீர்!

நாம் பெற்ற பேறு :

திருவாரூர் அருள்மிகு தியாகராஜப்பெருமான் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா எதிர்வரும் 4—4—1988 திங்கட்கிழமை காலை 10-15 மணி அளவில் சீருஞ் சிறப்புமாக நடைபெறவுள்ளது. ஏறத்தாழ 130 ஆண்டுகளுக்குப் பிறகு, சுமார் 50 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் நிறைவேற்றப்பெற்று, நாம் வாழும் காலத்தில் நடைபெறவிருக்கும் இக் குடமுழுக்குப் பெருவிழாவைக் காணும் பேறு திருவருளால் நமக்குக் கிடைத்துள்ளது. 40 ஆண்டு கட்கு முன் முக்கிய மூர்த்திகட்கு மட்டும் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. காலப் பழமையும், சர்லப் பெருமையும் பெற்றிலங்கும் திருவாரூர்த் திருத்தலத்தில் இறைவன்

தியாகத்திற்கோர் அரசனைத் தியாகராஜா என்ற திருநாமம் பூண்டு எழுந்தருளி அருள் வழங்குகின்றார். சைவர்களுக்குக் கோயில் என்றாலே தில்லைதான், பெருங்கோயில் என்றாலே திருவாரூர் தான். தமிழ் நாட்டிலும் கடல் கடந்தும் வாழும் தமிழ் மக்களையும் — உலகெங்கும் வாழும் சைவப்பெரு மக்களையும் ஞானசம்பந்தம் திருவாரூர்க் குடமுழுக்குக் காண வருக வருக என அன்புடன் அழைக்கிறது.

ஆரூர்ச் சிறப்பு :

தமிழ்நாட்டு அரசியல், மற்றும் சமயவரலாற்றில் திருவாரூர் பெற்றிருக்கும் இடம் உன்னதமானது. நிலமகளின் இதயக் கமலமாக விளங்கும் திருவாரூர், பண்டைச்சோழ மன்னர்களின் தலைநகரமாகவும், அவர்கள் முடிபுனைந்து கொள்ளும் திருநகராக வும் விளங்கியது. மனுநீதிச் சோழனின் அருள்வரலாறு இவற்றை மெய்ப்பிக்கிறது. சமய வரலாற்றில் பஞ்சபூதத் தலங்களில் பிருதிவித்(மண்)தலமாகவும், முத்தித்தலங்களில் பிறக்க முத்திதரும் தலமாகவும், சப்தவிடங்கத் தலங்களில் முதன்மைத் தலமாகவும் விளங்கும் பெருமை திருவாரூருக்கே உரியது. தமிழகக் கோயில் களிலேயே மிகப் பெரிய கோயிலும், திருக்குளமும் இங்கேதான் உள்ளது. கோயில் ஐந்துவேலி, குளம் ஐந்துவேலி, செங்கழுநீர் ஓடை ஐந்து வேலி எனக் குறிப்பர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்று நிலைகளிலும் பெருமைபெற்ற இத்தலத்தைப் பன்னிரு திருமுறைகளும் சிறப்பித்துப் பாடுகின்றன.

திருமுறைகளுள் திருவாரூர் :

மூவர் முதலிகளாலும் பாடப்பெற்ற இத்தலத்திற்கே சீகாழியை அடுத்து அதிகமான தேவாரப் பதிகங்கள் உள்ளன. திருஞான சம்பந்தர் பதிகங்கள் ஐந்தும், நாவரசர் பதிகங்கள் இருபத் தொன்றும், சுந்தரர் பதிகங்கள் எட்டும் ஆக முப்பத்துநான்கு பதிகங்கள் இத்தலத்திற்குரியன. ‘ஆரூர் அமர்ந்த அரசே போற்றி’ என்று புகழும் மாணிக்கவாசகர் ‘பூங்கமலத் தயனொடுமால்’ என்பது முதலாகிய மூன்றுபாடல்களை இத்தலத்திற்கு அருளிச்செய்துள்ளார். திருவிசைப்பாவில் பூந்துருத்தி நம்பி காடநம்பியும், திருப் பல்லாண்டுள் சேந்தனாரும் திருவாரூரைச் சிறப்பித்துப் பாடி யுள்ளனர். மூலாதாரத் தலமெனவும், மூலட்டானம் எனவும் குறிக்கப்பெறும் திருவாரூரில் இறைவன்ஆடும் அசபா நடனத்தைத் திருமந்திரம் தத்துவ நோக்கில் விரித்துரைக்கிறது. பதினொராந் திருமுறையில் சேரமான் பெருமான் நாயனாரின் திருவாரூர்

மும்மணிக்கோவை இடம் பெற்றுள்ளது. பெரியபுராணத்தில் நகரச் சிறப்பும் மற்றும் சுந்தரர் வரலாற்றுப் பகுதிகளும் திருவாரூரைப் பெரிதும் சிறப்பிக்கின்றன. மற்றும் ஏயர்கோன்கலிக்காமர், கழற் சிங்கர், விறன்மிண்டர், செருத்துணையார், நமிநந்தியடிகள், தண்டி யடிகள், சோமாசிமாறர் முதலிய நாயன்மார்களும் திருவாரூரோடு கொண்டிருந்த தொடர்பைப் பெரியபுராணம் சிறப்பித்துப் பேசு கின்றது.

ஆரூர் இலக்கியங்கள் :

திருவாரூருக்கு வடமொழியிலும், தமிழிலுமாக ஏறத்தாழ ஐம்பது நூல்களும், நூற்றுக்கும் மேற்பட்ட தனிப்பாடல்களும் உள்ளன. தலபுராணங்களாகத் திருவாரூர்ப் புராணம், கமலாலயச் சிறப்பு, தியாகராஜலீலை முதலியன அமைந்துள்ளன. இவையன்றித் திருவாரூர் நான்மணிமாலை, திருவாரூர்க் குறவஞ்சி, திருவாரூர் உலா, சித்தீச்சரம் தட்சிணாமூர்த்திப் பதிகம், திருவாரூர்க்கோவை, கமலைபராசக்திமாலை, கமலாம்பிகை பிள்ளைத்தமிழ், தியாகராஜர் கழிநெடில், தியாகேசர்வண்ணம், சுந்தரர் வேடுபறி முதலிய தமிழ் நூல்கள் குறிக்கத்தக்கன. வடமொழியில் அஜபா ரகசியம், ஆடகேஸ்வர மகாத்மியம், கமலாலய மகாத்மியம் முதலிய தல புராணங்களும், தியாகராஜலீலை, தேவாசிரிய மகாத்மியம், கமலாம்பிகா அஷ்டகம் முதலிய பிரபந்தங்களும் உள்ளன. சங்கீத மும்மூர்த்திகளின் இசைப் பாடல்களும், காளமேகப் புலவர் முதலியோரின் தனிப்பாடல்களும், நூற்றுக்கும்மேற்பட்டகல்வெட்டுக் களும், செப்பேடுகளும், அரிய ஓவியங்களும், உன்னதமான சிற்பங் களும் அரிய இசைக்கருவிகளும் இத்திருக்கோயிலுக்கு உரியனவாக விளங்குகின்றன.

ஆரூர் இறையவர்கள் :

திருவாரூர்த் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் புற்றிடங்கொண்டார். வன்மீகநாதர் என்பது வடமொழி வழக்கு, புற்றுமண்ணே இலிங்கத் திருமேனியாக அமைந்துள்ளது. அம்மை அல்லியங்கோதை என்று வழங்கப்பெறுகிறாள். நீலோத்பலாம்பாள் என்பது வடமொழி வழக்கு. திருமால் தம் மார்பில் வைத்துப் பூஜித்த சோமாஸ்கந்த வடிவினராகிய தியாகராஜரை, முசுகுந்தச் சக்ரவர்த்தி, இந்திரனிடமிருந்து பெற்றுத் திருவாரூரில் எழுந் தருள்வித்த வரலாற்றைக் கந்தபுராணத்தில் 120 பாடல்களில் கச்சியப்பர் விரித்துரைக்கிறார். புற்றிடங்கொண்டாருக்கு வலப் பக்கத்தில் அமைந்துள்ள தியாகராஜர் சந்நிதி மிகவும் பிரசித்த மானது. தவக்கோலம் கொண்ட அம்மையின் திருக்கோயில் ஒன்று

இவ்வாலயத்தின் வடக்கு முதல் திருச்சுற்றில் கமலாம்பிகை ஆலயம் என்ற பெயரில் அமைந்துள்ளது. 'கமலை பராசக்தி' என்று இவ்வம்மை அழைக்கப்படுகிருர். இவையன்றி இக்கோயிலுக்குள்ளேயே தனியே ஆரூர் அரநெறி (அசலேசம்), ஆடகேச்சுரம், சித்தீச்சரம் முதலிய சிவாலயங்களும், நாற்பதிற்கும் மேற்பட்ட சுற்றுக் கோயில்களும் இடம்பெற்றுள்ளன. இங்குள்ள சித்தீச்சரத்தின் தென்பால் அமைந்துள்ள தட்சிணமூர்த்தியின் சந்நிதியில்தான் கமலை ஞானப்பிரகசர், தருமை ஆதீனக் குருமுதல்வர் குருஞான சம்பந்தருக்கு ஞானேபதேசம் செய்வித்தருளினர்.

தருமையும் கமலையும் :

திருக்கயிலாயபரம்பரைத்தருமபுர ஆதீனத்திற்கும்திருவாரூர்த் திருக்கோயிலுக்குமிடையே ஏறத்தாழ 500 ஆண்டுகளாக நெருக்கமான தொடர்புகள் இருந்து வந்துள்ளன. திருவாரூர்த் திருக்கோயில் கட்டளைகள் பதின்மூன்று. அவற்றுள் ஒன்ருகிய இராஜன் கட்டளை, கமலை ஞானப்பிரகாசர் காலத்துக்கும் முன்னிருந்தே இம்மரபினர்களால் பராமரிக்கப்பட்டு வருகிறது. தருமை ஆதீனம் தோன்றிய பின்னர் இன்று வரை இவ்வாதீனக் குருமுதல்வர்களால் இராஜன் கட்டளை பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ஆதீன ஆவணங்கள் பல, அரிய செய்திகளைத் தருகின்றன. தருமை ஆதீனம் 12 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ முத்துக்குமார தேசிகர் (1782-1827) ஆட்சிக் காலத்தில், கட்டளைவிசாரணை முத்துக்குமாரத் தம்பிரான் ஓடாதிருந்த திருவாரூர்த் தேரைப் புதுப்பித்து ஓடச்செய்துள்ளார்கள். கமலவசந்த தியாகருக்கு நல்ல அபரஞ்சித் தங்கத்தால், நவரத்தினக்கற்கள் பதிக்கப்பெற்ற 'கண்ட மகரி' என்ற திருவாபரணம் செய்தணிவிக்கப்பட்டுள்ளது. தருமை ஆதீனம் 17 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீ மாணிக்கவாசக தேசிகர் (1874 - 1889) ஆட்சிக் காலத்தில் வாழ்ந்திருந்த அருணசலத் தம்பிரான் திருவாரூர்த் திருக்கோயில் தெற்குக் கோபுரத் திருப்பணியைக் கி. பி. 1897 இல் நிறைவித்துக் குடமுழுக்குச் செய்வித்தார்கள். இன்னும் தருமை ஆதீனம் திருவாரூர்க் கோயிலுக்குச் செய்து வந்திருக்கும் அருட்பணிகள் பலவாகும்.

திருப்பணியில் ஆதீனத்தின் பங்கு :

தற்போது தருமை ஆதீனம், நிகழவிருக்கும் குடமுழுக்கு விழாவை ஒட்டி, திருவாரூர்த் திருக்கோயிலுள் அமைந்துள்ள சித்தீச்சரத்திற்குப் புதிதாக அழகிய புராண-வரலாற்றுச் சுதைகள்

அமைத்துப் பொலிவுறுத்தித் திருப்பணியை மேற்கொண்டு நிறைவித்துள்ளது. மேலும், ஒரு நூறு ஆண்டுகளுக்குமுன் திருவாரூர் இராஜன் கட்டளையினால் நிறுவப்பெற்ற தெற்கு இராஜகோபுரத்தையும் பெரும் பொருட்செலவில் புதுப்பித்து வழங்கியுள்ளது. தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** திருவாரூர்த்திருக்கோயிலுக்குப்பலமுறைஎழுந்தருளித் திருப்பணிகளை விரைவுபடுத்தியருளியதோடு, தாமே முன்னிருந்து குடமுழுக்கு விழாவையும் நிகழ்த்தியருளுகின்றார்கள். பல்வேறு வகையில் குடமுழுக்குப் பெருவிழாச் சிறப்பாக நடந்தேற ஆவன செய்து வருகிறார்கள்.

பாரம்பரியச் சிறப்பு மிக்க திருவாரூர்த் திருக்கோயில் குடமுழுக்கு விழாக்காணத் தமிழ்நாடு அரசு 6½லட்சரூபாய் வழங்கியுள்ளது. அன்பர்கள் இதுவரை 33½ லட்சரூபாய் நன்கொடையாக வழங்கியுள்ளனர். திருப்பணிக் குழுத்தலைவர் அன்பர் திரு. சு. தென்கோவன் அவர்களும், நிர்வாக அதிகாரி திரு. சு. ஸ்ரீதரன் அவர்களும், திருப்பணிக் குழுவினரும் அறநிலையத்துறை அதிகாரிகளும், அலுவலர்களும் பொதுமக்களும் இக்குடமுழுக்குச் சிறக்க அரும்பணியாற்றி வருகிறார்கள். நம் வாழ்நாளில் நமக்குக் காணக் கிடைத்த அரிய பேறு திருவாரூர்க் குடமுழுக்கு விழா. அன்பர்கள் குடமுழுக்கு விழாக் கண்டு, ஸ்ரீ தியாகேசனைத் தரிசித்து, இம்மை மறுமைப் பேறு பெற்று உய்வார்களாக.

"ஆரூர் அமர்ந்த அரசே போற்றி!
சீரார் திருவையாறு போற்றி!"

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருக்கடவூரில் நடைபெற்ற
அபிராமி அந்தாதி ஆராய்ச்சி நூல் வெளியீட்டு விழாவில்
வழங்கியருளிய

ஆசியுரை

5—2—1988

" சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும்அவர்க் கேஅழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே "

சிவனை மறவாச் சிந்தையர் :

அபிராமி அந்தாதி ஓர் அருள் நூல். இவ்வருள் நூலை 250 ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றி அன்னையின் அருளைப்பெற்றவர் ஸ்ரீ அபிராமியின் பக்தராகிய அபிராமி பட்டர். அவர் சிவபரம் பொருளையே முழுமுதற்பொருள் என்று உணர்ந்தவர். ஆயினும், தாயின் அருள்வழியே, அவரை மிகவும் ஈர்த்தது.

" மாய நட்டோரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீய விட்டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப் பின்தாயைமறந்(து)
ஏயுமத்தே நிட்டை என்றுன் எழில்கச்சி ஏகம்பனே "

என்று பட்டினத்தார் சொல்வதுபோலத் தாயின் மூலமாக இறையருளைப் பெற்றவர். அதனால்தான், அபிராமி அன்னையின் திருவடி மலர்களை அல்லும் பகலும் தொழுமவர்க்கு அழியா அரசும் தவநெறியும் கிடைக்கும் என்று கூறிச் சிவலோகமும் சித்திக்கும் என்று இயம்புகின்றார். இங்கு அன்னையின் அருளால் சிவலோகமும் சித்திக்கும் என்பது இணைத்துச் சிந்திக்கத்தக்கது.

ஆராய்ச்சி நூல் :

அபிராமி அந்தாதி என்னும் அருள் நூலுக்கு உரைகள் பல தோன்றியுள்ளன. இருப்பினும் ஆய்வுரை நூல் இதுவரை யாரும்

எழுதியதாகத் தெரியவில்லை. இப்பொழுது திருமதி தேவகி முத்தையா இந்த ஆராய்ச்சி நூலைச் சிறப்பான முறையில் ஆய்ந்து எழுதியுள்ளார். எளிய இனிய நடையில் எழுதப் பெற்றுள்ள இவ்வாய்வு நூல், நான்கு தலைப்புக்களால் பிரித்து உருவாக்கப் பெற்றுள்ளது. அபிராமி அந்தாதியின் அமைப்பும் சிறப்பும், இந் நூலில் காணப்பெறும் சமயக் கூறுகள், இந்நூலில் காணப்பெறும் இலக்கியக் கூறுகள், இந்நூலும் ஏனைய சமய இலக்கியங்களும் என்பன அவை. அபிராமி அம்மையிடத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அபிராமி பட்டர் எழுதிய அபிராமி அந்தாதி என்னும் நூலுக்கு, அவ் அன்னையின் திருவருளில் தோய்வும் பக்தியும் கொண்டுள்ள இவ் அம்மையார் ஆய்வு நூல் எழுதியிருப்பது பொருத்தமானதே.

மாற்றமும் ஏற்றமும் :

இந்த ஆராய்ச்சிநூலை, அபிராமி பட்டர் அருள் பெற்ற ஐதிக விழா நடைபெறும் தை அமாவாசையன்று வெளியிடுவது எனத் திட்டமிடப் பட்டது. அன்று சாலை மறியல் காரணமாக விழா நடைபெறவில்லை. ஆனாலும் அதே தை மாதத்தில் அம்மைக்குரிய வெள்ளிக்கிழமையில், அன்னைக்குரிய பூரநட்சத்திரத்தில் அவ்விழா நடைபெறுகிறது. எல்லாம் நன்மைக்கே என்பதற்கேற்ப அன்று நடைபெறாது இன்று இது நடைபெறுவது குறித்துக் சில அருள் நிலைத் தெளிவுகள் தோன்றுகின்றன. அன்று, தை அமாவாசையில் தான் அபிராமிபட்டருக்காகத் தம் தாடங்கத்தை வானில் வீசி எறிந்து நிலவொளியைக் காட்டியருளினாள் அபிராமி அன்னை. இன்றோ, பௌர்ணமியின் மூன்றாவது நாளாதலின் இன்று இவ் விழாவை நடத்த வைத்து, யாரும் எதிர்பாராத விதமாக வானில் நிலவின் காட்சியைச் சரியாக இந்தநேரத்திற்கு மேடையில் அமர்ந்தபடியே அபிராமி அன்னையின் திருச்சந்நிதிக்கு எதிரில் நாம் காண வைத்தருளினாள். இவ்வரிய காட்சியை இப்போது காண்கிறீர்கள். இவ்விழா அன்று தை அமாவாசையில் நடந்திருந் தால் இந்த நிலவின்காட்சி கிடைத்திருக்காது. பக்தியில் சவலையாக இருக்கும் நமக்கும் அன்னை பெருங்கருணையோடு இக்காட்சியைக் காணுமாறு அருள்பாலித்துள்ளாள். இது எல்லாம் இறை செயலே என்பதைத் தெளிவிக்கிறதல்லவா?

தில்லையின் நினைவு :

அபிராமிபட்டர் இந்நூலுக்கு விநாயகர் வணக்கம் பாடும் பொழுது, இங்குள்ள கள்ளவாரணப் பிள்ளையாரைப் பாடாமல் "தில்லை ஊரர் தம் பாகத்து உமை மைந்தனே" என்று தில்லை விநாயகரைத் தோத்திரம் செய்கின்றார். தில்லை, சைவத்திற்குப் பொதுவான தலம் என்பது பற்றியும்; கணபதி அங்கிருந்தாலும்,

இங்கிருந்தாலும் ஒருவரே என்பது குறித்தும் இங்ஙனம் அவர் பாடியுள்ளார். இச்செய்திகளை ஆய்வாளரும் இந்நூலில் குறித்துள்ளார். இவ்விழாவிற்குத் தில்லை தீட்சிதர் பிரசாதம் கொண்டு வந்து வழங்கியதும் இக்கருத்தையே அறிவிக்கிறது. மேலும் ஒரு சிறப்பும் உள்ளது.

எல்லாம் நன்மைக்கே :

சமீபத்தில் தில்லை நடராசருக்கு, காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பெருமுயற்சியால் வைரக் கிரீடம் அணிவிக்கும் நிகழ்ச்சி நடந்தது. இதற்குப் பெரும்பொருள் வழங்கிய திரு. ஏ. சி. முத்தையா குடும்பத்தினர் அதில் கலந்து கொள்ளச் சென்றனர். அவ்வமயம் இந்த ஆய்வு நூலின் இரண்டு படிகளை ஒரு வெள்ளித் தட்டில் வைத்து நடராசரின் திருவடியில் வைத்து எடுத்துக் கொடுக்கச் சொன்னதாகவும், அப்பொழுது இந்த நூலின் மீது அந்த வைர மகுடமும் வைக்கப்பட்டது என்றும். இந்த வெளியீட்டுவிழா அமாவாசையன்று நடைபெறுமல் தடைப் பட்டதனுல் ஏற்பட்ட மனக்கவலை அதுபொழுது நீங்கியது என்றும் திருமதி. தேவகி அம்மையார் குறிப்பிட்டார். எவை நேர்ந்தாலும் அவை அனைத்தும் நன்மைக்கே என்பதனை இது காட்டுகிறது.

அடிமுடி கண்டது :

திருமாலும் பிரம்மனும் அன்று அடிமுடிதேடிக் கண்டிலர்' ஆனல் இயமனுகிய காலன் அடியை மட்டும் கண்டான். மார்க்கண்டேயர் மீது பாசம் வீசிய போது சிவபெருமான் இடது பாதத்தால் இயமனை உதைத்துச் சம்ஹரித்தார் அல்லவா? அப்போது மறக் கருணையால் இடது பாதம் கண்டான் இயமன். இதனை அப்பர் சுவாமிகள்,

“ மேலும் அறிந்திலன் நான்முகன் மேற்சென்று கீழிடந்து
மாலும் அறிந்திலன் மாலுற்றதே வழிபாடு செய்யும்
பாலன் மிசைச் சென்று பாசம் விசிறி மறிந்த சிந்தைக்
காலன் அறிந்தான் அறிதற்கரியான் கழலடியே”

என்ற பாடலால் அறிவிக்கின்ருர்.

உயிர் வர்க்கத்தினர் யாரும் இதுவரை அடிமுடிகண்டதாக வரலாறில்லை. ஆனல் திருவாரூரில் தியாகேசப் பெருமான் சுந்தரருக்காக இருமுறை தூது சென்ற போது பரவைநாச்சியார் இல்லத்தின் வாயில் நிலையில் உள்ள கீழ்ப்படி அடியையும், மேல் படி முடியையும் கண்டதாக ஒரு புலவர் நயம்படப் பாடியுள்ளார். அதை அடுத்து இவ்வபிராமி அந்தாதி ஆய்வு நூலும் நடராசப் பெருமானின் அடிமுடி கண்டுள்ளது என்பதை வைரக்கிரீடம் அணிவிப்பு நிகழ்ச்சி நமக்குப் புலப்படுத்துகிறது. இது இந்நூலுக்கு

வருவாய் நீ! முருகா!

'செந்தில் குமரன்'

(கட்டளைக் கலித்துறை)

சிங்க மிருக்கும் குகைக்குள்
துணிந்தோர் சிறு நரியும்
பொங்கிடும் பாம்பும் எலியும்
முயலும் புகுந்திடுமோ?
இங்கென துள்வரு வாய்நீ!
முருகா! இதய முற்ருல்
மங்கும் புவிவிவ காரத்துன்
பங்கள் மறைந்திடுமே! (1)

கதிரவன் நிற்கும் பொழுது
வானத்திலே கண்சிமிட்டும்
சதிர்சிறு நட்சத் திரங்கள்
புகுந்தங்குச் சார்வதுண்டோ?
உதிர்சுடர் வேலவா! நீயும்
இரங்கி என்உள் நிறைந்தால்
எதிர்வரும் துன்பக் கடலலை
என்னைவந்(து) என்செயுமே? (2)

பூங்கம லம்பூத்து வாசனை
எங்கணும் பொங்க நின்ருல்
ஆங்குள சேற்றுச் சகதியின்
நாற்றம் அடித்திடுமோ?
தேங்குள பாதாம் புயத்தைஎன்
நெஞ்சில் திகழவைத்தால்
ஈங்குல கத்துயர் என்செயும்
வேல்கொள் இறையவனே! (3)

ஆற்றுப் படகினில் ஏறிச்
செலுவோர் அகம் வருந்தித்
தோற்றிடும் தாகத்தால் எங்கேனும்
நொந்து துவளுவரோ?
போற்றும் கொடிவாரணத்தோய்!
உன் நல்லருள் பொக்கிசத்தை
மாற்றிஎன் பால்நீ வழங்கினால்
உண்டோ இம் மாமயக்கே? (4)

கற்பகத் தின்கீழ் இருப்போர்
எவரேனும் கண்மயங்க
அற்பப் பசிகொண்டு வாடித்
துவண்டே அழிவதுண்டோ?
பொற்பகத் தெய்வமே! உன்றன்
அடியைப் பொருந்தியவர்
விற்பன ராகிமேல் நின்றிடு
வாரன்றி வேறெதுவே? (5)

பழுத்த கனிச்சோலை தன்னில்
இனிதாகப் பைங்கிளியை
இழுத்து விடுத்தால் அதுகொளும்
இன்பிற்கும் எல்லையுண்டோ!
கழுத்துச் சுடர்நீலன் காளையே!
உன்அருட் காட்சியுற்றால்
வழுத்து வேன்பாடிப் பரவசத்தால்
ஆடி வாழ்த்துவனே! (6)

கட்டுரை எண். 93.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன் M.A.D., Lit., Ph. D.. D. P. P. A., D, U. N., I. U.
பருத்தியூர்.

நகையே இஃது இந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை, மானே முதுகண், முடிவில் அந்த
வகையே பிறவியும்; வம்பே மலைமகள் என்பது; நாம்
மிகையே இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே.

அ. இந்த ஞாலமெல்லாம் பெற்ற நாயகிக்கு
முகையே முகிழ்முலை; மானே முதுகண்.

(1) இவ்வுலகங்கள் அனைத்தையும் ஈன்றெடுத்த தலைவியாகிய அம்பிகைக்குத் தாமரை அரும்பே திருமுலையாய் இருக்கிறது. அருளால் முதிர்ந்த கண் மானின் கண்களைப் போன்றிருக்கிறது.

(2) குழந்தை யொன்றினைப் பெற்றெடுக்கும் வரையில் பெண்களின் அழகு கட்டுக் குறையாமல் இருப்பது இயல்பு. நெல்லை மாவட்டத்தில் "கோடி ஒரு வெள்ளைக்கு, குமரி ஒரு பிள்ளைக்கு" என்ற வழக்கு ஒன்று உண்டு. அதாவது, புதிய கோடி - வேட்டி ஒரு சலவையில் அதன் மிடுக்கினை இழந்துவிடும். அதுபோல் பெண்ணின் இளமை - அழகு ஒரு பிள்ளை பெற்றபின் குறைந்து விடுகிறது என்பது அதன் பொருள்.

உலகில் ஒரு குழந்தை பெற்ற பெண்ணின் அழகு குறையத் தொடங்குவது இயல்பாய் இருக்கிறது. அதற்கு மாறாக, எல்லா உலகினையும் பெற்றெடுத்த அன்னையின் இளமையழகு சிறிதும் குன்றாமல் இருக்கிறது.

(3) அரும்பு போன்ற கொங்கையும், மான் போன்ற பார்வையும் அவ்விளமையில், மக்கட்பேற்றுக்கு முன் சிறந்து விளங்கும். ஆனால் பலயுகங்களாய், பலஉலகங்களை ஈன்றெடுத்த அம்பிகையின் திருமுலை அரும்பெனவும், பார்வை மானினுடையதாகவும் இருக்கிறது.

(4) "தருணி" என்றும் "நித்ய யவ்வனா" என்றும் சகஸ்ர நாமம் கூறுகிறது. எப்போதும் அழகு கொப்பளிக்கும் அழகுடன் திகழ்பவள் 'தருணி'. அதே இளமை என்றும் குன்றாதவள் 'நித்ய யவ்வனா'.

(5) வயது அவளது அழகினை எதுவும் செய்து விட இயலாது என்ற பொருளில் ஷேக்ஸ்பியர் "Age cannot wither her" என்கிறார். அவரது பிரபலமான இத்தொடர் அழியும் அழகு படைத்த அரசியினைப் புகழப் பயன் படுத்தப்பட்டது. ஆனால் உண்மையில் அப்புகழ்ச்சி அழியா அழகுடைய அம்பிகைக்குத்தான் பொருந்தும்.

(6) மாறுதலுக்கும் இழிவுக்கும் உட்படும் மானுட அழகினைப் போலன்றி என்றும் நிலைத்த கடவுளின் அழகுதான் அழியா அழகு. அவ்வழியும் அழகினைப் போற்றியவனை அழியா அரங்கனின் அழகில் ஈடுபடுத்தி அவனை உறங்காவில்லி தாசனென உயர்த்தினார் இராமானுஜர். "இவன் வடிவென்பதோர் அழியா அழகுடையான்" என்றார் கம்பர்.

ஆ. முடிவு இல்; அந்த வகையே பிறவியும் வம்பே மலைமகள் என்பது.

(1) அவளுக்கு இறுதி என்பதுஇல்லை. அப்படியே அவளுக்குப் பிறவியும் இல்லை. அவளை மலைமகள் என்பதும் வீண் வாதமே.

(2) அழகு மட்டும் அழியாததல்ல. அவளே என்றும் அழியா முழுமுதல் ஆவாள். அவ்வாறே அவள் பிறப்பதும்இல்லை. 'நிர்பவா' 'நிர்நாசா' என்பன அவளது நாமங்கள். "பெம்மான் முருகன் பிறவான் இறவான்" என்பது போல் அவள் பிறப்பதும் இறப்பதும் இல்லை. இறைவனைப் போலவே அம்பிகைக்கும் 'அவதாரம்' என்னும் கீழிறங்கிப் பிறக்கும் நிலை இல்லை. வேண்டிய வடிவினை வேண்டும் பொழுது எடுத்துக் கொண்டு அருள் செய்யத் தோன்றுவதே அல்லாமல் அவள் பிறப்பதில்லை. தட்சன் மகளாகவும் இமவான் மகளாகவும் அவள் வந்த பொழுது குழந்தை வடிவுடன் மலர்மேல் கிடந்தாள். இலலிதாம்பிகையாகவும் மீனாட்சியாகவும் வந்த பொழுது சித்அக்னிகுண்டம் என்ற ஞானத்தீக் குண்டத்திலிருந்து தோன்றினாள். ஆனால் பிறந்ததே இல்லை.

(3) "அவள் மலைமகளாய்ப் பிறக்க வில்லையா?" என்று கேட்கத் தோன்றும். அது வீண் வாதமே (வம்பே) என்கிறார் பட்டர். ஏனெனில் மேற்கண்டபடி, அவள் குழந்தை வடிவம்

கொண்டாள் என்ற வரலாறு தெரியாதவர்களே அங்ஙனம் வீண் வம்பு செய்வர்.

இ. நகையே இஃது.

(1) இவ்வாறு அகிலாண்டகோடியீன்றும் இளமையழகுடன் இருப்பதும், பிறவியில்லாதவள் பிறந்தது போல் தோன்றுவதும், நகைப்பைத் தருவதாய் இருக்கிறது.

(2) ''நகையே இஃது'' என்பது எள்ளக் குறிப்பு அன்று. வியப்பினை உணர்த்துவது! தம்முள் முரண் பட்டுத் தோன்றும் அதியசங்களை நினைக்கும் பொழுது நமக்குள் நகை தோன்றுதல் இயல்பு.

ஈ. நாம் இவள் தன் தகைமையை நாடி விரும்புவது மிகையே.

(1) நம்போன்றோர் இவளது மேலான இயல்புகளை ஆராய்ந்து அறிய விரும்புவது நமது அறிவுக்கு மிகையான (அப்பாற்பட்ட) செயலாகும்.

(2) நமது சிற்றறிவினைக் கொண்டு மேற்கண்ட இவளது இயல்புகளை ஆராயப் புகுவது நம் அறிவாற்றலுக்கு அப்பாற் பட்டது. அவ்விருப்பம் மிகையானது.

நிறையக் கற்றுத் தேர்ந்த பண்டிதர் ஒருவர் கடவுளின் தன்மைகளை அறியும் ஆராய்ச்சியினை மேற்கொண்டார். கட்டுக் கட்டாக நூல்களை வாங்கி ஆராய்ச்சி நோக்குடன் படித்தார். தினசரி மாலையில் அவர் கடற்கரையில் அமர்ந்து ஏதாவதொரு பெரிய நூலினைப் படித்துக் கொண்டிருப்பார். அவ்விடத்துக்கு அருகே சிறுவன் ஒருவன் கடல் நீரினைக் கிளிஞ்சல் கொண்டு இறைத்துக் கொண்டிருந்தான். அவனது செயலைக் கண்டுசிரித்தார் பண்டிதர். சிறுவன் கேட்டான் ''சுவாமி! நீர் என்ன ஆராய்ச்சி செய்கிறீர்?'' ''நான் இப்புத்தகங்களைப் படித்துக் கடவுளைப் பற்றி ஆராய்கிறேன்'' என்றார் புலவர். ''நான் கடல் நீரைக் கிளிஞ்சலால் இறைப்பது போன்றது தான் உமதுமுயற்சியும்!'' என்றான் சிறுவன். இக்கதையினை நினைவுபடுத்தும் சொற்றொடர் தான் ''இவள் தன் தகைமையை நாடி விரும்புவது'' என்பதும்.

நீடித்த இளமை நலம் எய்துதலே இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

(தொடரும்)

கட்டுரை எண். 3.

போதமும் சித்தியும்

டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன்

குருவணக்கமும் நூலின் வழியும் :

சிவஞானசித்தியாரின் ஆசிரியர், தாம் எழுதிய நூலுக்கு முதல் நூல் மெய்கண்டாரால் அருளிச் செய்யப்பெற்ற சிவஞானபோதம் என்னும் கருத்தினைக் கூறுகின்றார். இவ்விடத்தில் அவர் தம் குரு நாதருக்கு வணக்கம்கூறி, குருவருளின் மேன்மையினையும் விளக்கிக் காட்டுகின்றார்.

பிறவிக்கடலில் தான் அழுந்தாதபடி, குருநாதர் கருணை என்னும் கையினால் எடுத்து, தனது அறிவினுள்ளே தம் வடிவம் விளங்கும்படி செய்து, தனது சென்னியில் திருவடிகள் இரண்டையும் சூட்டித்தீக்கை செய்தருளினர் என்றும் அவர், திருவெண்ணெய் நல்லூரில் வாழும் மெய்கண்டார் என்றும் அவர் அருளிய சிவஞான போதத்தினைத் தனது சென்னியில் கொண்டு சைவ சித்தாந்தத்தின் உண்மையினை விளக்கிக் கூறுவதாகவும் ஆசிரியர் இயம்புகிறார்.

"என்னையிப் பவத்திற் சேரா வகையெடுந் தென்சித்தத்தே
தன்னைவைத் தருளி னாலே தாளிணை தலைமேற்சூட்டும்
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்
[கண்டான்நூல்
சென்னியிற் கொண்டு சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றும்".

என்பது சித்தியார் பாடல். இப்பாடல் கூறும் கருத்துக்களை மூன்று வகையாகப் பிரித்துக் காணலாம். 1. குருநாதர் அருள்வழியே சீடர் பயன்பெறலாமே யல்லாது வேறு ஒன்றும் செய்ய இயலாது என்பதும் 2, குருநாதருடைய திருவடிகளைத் தலையில் சூட்டிக் கொள்வதோடு அல்லாது அவர் அருளிச் செய்த நூலினையும் சிரத்தில் கொள்ளவேண்டும் என்பதும், 3. சித்தியார் வழிநூல்; சிவஞானபோதம் முதல்நூல் என்பதும ஆகும்.

"என் சித்தத்தே தன்னை வைத்து அருளினாலே தாளிணை தலைமேல் சூட்டும்" என்பதனால் முதல் கருத்தும், "மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு" என்பதனால் இரண்டாவது கருத்தும் 'சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றும்" என்பதனால் மூன்றாவது கருத்தும் விளக்கப்பெற்றன.

நுதலிய பொருளும் கேட்போரும் பயனும் :

சித்தியாரின் ஆசிரியர் தாம்எழுதிய நூல் யாருக்கு, எவ்வகையில் பயன்படும் என்னும் கருத்தினை அடுத்து விளக்குகின்றார். முன் செய்த தவ வலிமையினாலே சித்த சுத்தியுடையாராய்ப் பிறந்து இறைவனை நோக்கி வழிபடும் தொண்டர்களை அவ்விறைவன் தாமாகவே சிவகதியில் சேர்ப்பன்; எனவே அவர்களுக்கு நூல்கள் வேண்டுவதில்லை. ஆனால் பலநூல்களையும் கற்று இறையருள் வழி வீடுபெற வேண்டும்என்று விரும்பும் அன்பர்களுக்கு அந்நெறியினை விளக்கிக்கூறும் நூல் வேண்டும்; அதனை வகுத்துக் கூறுமுகமாகவே இந்நூல் தோன்றியது என்கின்றார்

"பண்டைநற் றவத்தாற் றோன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்
தொண்டரைத் தானே தூயகதியினிற் செருகுப்பன்; மார்க்கர்
கண்டநூ லோதி வீடு காதலிப் பவர்கட் கீசன்
புண்டரி கத்தாள் சேரும் பரிசினைப் புகல லுற்றும்"

என்னும் சித்தியார்பாடல் அக்கருத்தை விளக்குகிறது. இப்பாடலில் நுதலிய பொருளாகக் கூறப்பெறுவது, வீடுபேறு அடைய சில உரிய நெறிமுறைகள் உள்ளன என்பதும், கேட்பார்எனப்படுவோர், வீடுபேறடைய விரும்பும் அன்பர்கள் என்பதும், பயன் அந்நெறி களை அறிந்து அவற்றின் வழி வாழ்ந்து இறையருள் பெறுதல் என்பதும் ஆகும்.

அவையடக்கம் :

இனி, சிவஞானபோதம், சித்தியார் என்னும் இருநூலும்கூறும் அவையடக்கம் பற்றிச் சிந்திக்கலாம்.

மெய்கண்டார் கூறும் அவையடக்கம் இருவகையாகப் பிரிக்கப் படுகின்றது. 1. இறைவனுக்கு உடைமைப் பொருளாகிய தம் இயல்பினை உணர்ந்து தம்மை உடையானாகிய தலைவனை உணரும் சித்தாந்த சைவர், அவர் தமக்கு உடைமைப் பொருளாகிய எம்மையுடையராகலின் எம்மையும், எம்மாற் செய்யப்பட்ட நூலையும் குற்றங்களை நீக்கிக் குணம் கொண்டு பாராட்டுவர்; என்றுமே இகழ்தல் செய்யார் என்பதாம். 2. மேற்கூறியவாறு இருந்து, தம்மைஉணராதார் தம்மை உடையானாகிய தலைவனையும் உணரார்; அவர்கள் ஒருங்கு இருந்து தம்மில்தாமே முரணுவர்; அத்தகைமையார் எம்மையும் எம்மால் செய்யப்பட்ட நூலையும் இகழ்ந்துரைப்பர்; எனினும் அவற்றை யாம் ஒரு பொருளாகக் கருத மாட்டோம் என்கிறார் ஆசிரியர்.

"தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார் — தம்மை
உணரார் உணரார் உடங்கு இயைந்து தம்மில்
புணராமை கேளாம் புறன்"

என்னும் இப்பாடலில் மெய்கண்டார் இருவேறு உலகியல் உண்மை களைப் பொதிந்து வைத்து விளக்கியுள்ளார். 1. உலகியல் நிலையில், உடையவன், உடைமைப்பொருளிடத்துக் குற்றங்களைக் காணினும் அவற்றைப் பெரிது படுத்தாது குணங்களை மட்டும் கண்டு பாராட்டுவன். இதனை முதலில் கூறும் பகுதியில் வைத்து ஆசிரியர் தம்மைஉடைமைப்பொருளாகஉடையவர்கள் இகழாதுபாராட்டுவர் என்கிறார். 2. ஒரு கருத்தை மறுத்துக் கூறுவோர், அவர்களிடத்து ஒன்றுபட்ட எண்ணமும், கோர்வையான கருத்துக்களும் இன்றி அவர்கள் தமக்குள்ளே முரணி வேறுபட்டு இருப்பின், அக்கருத்துக் களை மக்கள் ஒரு பொருட்டாகக் கருத மாட்டார்கள். இதனை இரண்டாவது வகையில் வைத்து ஆசிரியர், "புணராமை கேளாம் புறன்" என்னும் தொடரில் விளக்குகின்றார்.

இங்ஙனம் மெய்கண்டார் அவைக்கு அடங்கியும், அவையை அடக்கியும் கூறுவது எண்ணற்பாலது.

இப்பாடலில் "தம்மை உணரார்" என்னும் தொடருக்கு உரை எழுதவந்த சிவஞானமுனிவர், பல புறச்சமயவாதிகளையும் இதனால் குறிப்பிட்டு மெய்கண்டார் மறுத்துள்ளார் என்று எழுதியுள்ளார். "தம்மை உணரார்" எனப் பொதுப்படக் கூறியதனால் தாம் ஒரு பொருள் உண்டு என்பதே உணராத உலோகாயதரும் தம்மைக் குணிப்பொருள் என்று உணராத புத்தர், சாங்கியர், மாயாவாதி களும் தம்மை முதல்வனுக்கு உடைமைப் பொருள் என்று உணராத ஏனைச்சமயத்தாரும் அடங்குவர். மேலும் பாஞ்சராத்திரிகள் தம்மை உடைமைப் பொருள் எனக்கொள்ளினும் தமக்குப் பரிணமம் கூறுதலாலும் நாராயணன் பல அவதாரம் எடுத்தான் என உடைய வனுக்குப் பரிணமம் கூறுதலாலும் திருமாலே உடையவன் என உடையவன் அல்லாதவனை உடையவன் எனக் கூறுதலாலும் அவரும் தம்மை உணராதவரே ஆவர்.

சிவாத்துவித சைவர், உடையவனது சிற்சத்திக்கு வளர்ச்சி கூறுதலால் அதாவது சிற்சத்தியின்பேதமே பசு பாசங்களாகின்றன என்பதால் அவரும் தம்மை உணராதவரே ஆவர்.

இங்ஙனம், மெய்கண்டார் இவர்களை மறுக்கும் நிலையில், சிவஞானபோதமும், ஓராற்றான் பரபக்கம் கூறியதாயிற்று.

(தொடரும்)

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

(மலர் 47. இதழ் 3, பக்கம் 142 இன் தொடர்ச்சி.)

2. பிளேட்டோ (Plato) - தொடர்ச்சி (5)

(கி. மு. 427-347)

குகை உருவகக் கதை :

ஏற்கனவே குறிப்பிட்டது போல இனிய சுபாவம் படைத்த பிளேட்டோ, இதயபூர்வமாகத் தம் முக்கிய கோட்பாடுகள் அனைத்தையும், தம் குருதேவர் சாக்ரட்டீஸ் பேரால் வெளியிடுவது வழக்கம். அம்முறையைத் தொடர்ந்து பிளேட்டோ, குகை உருவகக் கதையையும் (The Allegary of the Cave) தம் ஆசிரியர் பேசுவதாக வெளியிடுகிறார். இந்த உருவகக் கதை மூலம் பிளேட்டோ மனிதன் எங்ஙனம் மகத்துவம் பொருந்திய ஞானத்தைப் பெறுகிறான் என்பதையும் சுட்டிக் காட்டுகிறார். இக்கதையை சாக்ரட்டீஸ் (Socrates), கிளௌகான் (Claucon) என்ற தத்துவ மேதைக்குச் சித்தரித்துக் காட்டுவதாக பிளேட்டோ பேசுகிறார். குகை உருவகக் கதையைப் பின்வருமாறு பிளேட்டோ கூறுகிறார்:

வினோதமான கைதிகள் :

நம் இயற்கை எந்த அளவுக்குப் பிரகாசமாகவோ அல்லது பிரகாசம் அற்றதாகவோ இருக்கிறது என்பதை விளக்க ஒரு சித்திரத்தைக்காட்ட விரும்புகிறேன். கற்பனை செய்து காணுங்கள்! மனிதர்கள் தரைக்குக் கீழ் உள்ளதொரு பாதாள குகையில் (underground den) வாழ்வதாக எண்ணிக் கொள்ளுங்கள். அந்தப் பாதாள குகையின் நுழைவுத் துவாரம் வெளிச்சத்தை நோக்கித் திறந்து விடப்பட்டுள்ளது. ஏதோ ஒரு மூலையில் இருந்து வெளிச்சம் பாதாள குகைக்குள் அடித்துக் கொண்டிருக்கிறது. இங்குஇருக்கும் மனிதர்கள் அங்கே குழந்தைப் பருவத்திலிருந்து வாழ்கிறார்கள்.

அவர்கள் கால்கள் கழுத்தோடு சேர்த்து, அவர்கள் திரும்பவோ அசையவோ முடியாதபடி இரும்புச் சங்கிலியால் இறுகக் கட்டப் பட்டுள்ளார்கள். அவர்கள் தம்முன்னல் நேராகத் தெரிவனவற்றை மட்டுமே தான் காணலாம். ஆனல் பக்கவாட்டத்தில்உள்ளதையோ, பின்பக்கம் உள்ளதையோ சற்றும் திரும்பிக் காண முடியாது. பிணைத்துள்ள சங்கிலி பின்னும் பக்க வாட்டத்திலும் அசைய முடியாதபடி தலையொடு சேர்த்து அப்படிக் கட்டப்பட்டுள்ளது. மேலும் பின்னல் கொஞ்ச தூரத்தில் தீக்குண்டம் ஒன்று சுடர் விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. கைதிகளாகக் கட்டப்பட்டுள்ள வர்கள் இருக்கும் இடத்திற்கும், பின்னல் எரியும் தீக்குண்டத்திற்கும் இடையில் சற்று உயரமான மட்டத்தில் ஒரு பாதை போகிறது. நீ அதைப் பார்த்தாயானல் தெரியும் அந்தப் பாதையை ஒட்டி ஒரு சுவர் சென்றுகொண்டு இருக்கும். பொம்மைக் கூத்து காட்டுவோர் பாத்திரங்கள் வந்து நடித்துப் போகத் தங்களுக்கு முன்னல் ஒரு திரை அமைத்து இருப்பார்களே அப்படி அது தோன்றும். விளங்கு கிறதா? கிளௌகான் (Claucon)!

கிளௌகான் : புரிகிறது சொல்லுங்கள்.

சாக்ரட்டீஸ் தொடர்ந்து பேசுகிருர்:

" அப்படி அமைக்கப்பட்ட அந்தப் பாதை வழியே மனிதர்கள் பல வகைப்பட்ட சாமான்களையும், சிலைகளையும் கட்டையால் செய்யப்பட்ட விலங்கினங்களின் உருவங்களையும் (அவைகள் கட்டையாலும் கல்லாலும் செய்யப்பட்டவை) சுமந்தவாறு சென்று கொண்டிருக்கிருர்கள். அவற்றின் நிழல் வடிவங்கள் கைதிகள் பார்த்துக் கொண்டிருக்கும் குகைச்சுவரிலே விழுகின்றன. ஆனல் அவர்கள் பாதை வழி செல்லும் அவற்றின் நிழல் உருவங்களைத் தான் காணலாம். நிஜ உருவங்களைக் காண முடியாது அல்லவா?"

கிளௌகான் : நீங்கள்என்முன்னல் ஒருவினேத சித்திரத்தையே காட்டுகிறீர்கள். அவர்கள் வினேதமான கைதிகளாக இருக் கிருர்களே!

சாக்ரட்டீஸ் குகை உருவகக் கதையைத் தொடர்ந்துகூறுகிருர்:

" நம்மைப் போலவே அவர்கள் தங்களது நிழல் உருவத்தை (shadow) மட்டுமே காண்கின்றனர். அல்லது ஒருவர் மற்றவர் உருவத்தைக் காண்கின்றனர். அதுவும் பின்னல் இருக்கும் தீக்குண்டம் குகைக்கு எதிரிலுள்ள சுவரில் காட்டுவதைமட்டுமே அவர்கள் காண்கின்றனர். அல்லவா?"

கிளௌகான் : உண்மைதான்! அவர்கள் எதிரில் தோன்றும் வேறு எதனையும் காணமுடியாது. அவர்கள்தம் தலைகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு உள்ளதால் அவர்கள் அப்படிக்குஇப்படி அசையத் தான் முடியாதே!

சாக்ரட்டீஸ் : "ஆம்! அதேபோல அந்த வழியாகப் பிறர் சுமந்து செல்லும் பொருள்களையும் கூடக் காணமுடியாது. நிஜ உருவங்கள் அவர்களுக்குத் தெரியாது; நிழல் உருவங்கள் மட்டும் தாமே தெரியும். அவர்களைப் பொறுத்தவரை அவர்கள் காண்பது நிழலே. நிஜ உருவங்கள் அவர்கட்கு ஒன்றுமே கிடையாது – தெரியவும் தெரியாது தானே?

குகைக் கைதிக்கு விடுதலை :

ஆனால் திடீரென அவர்களைப் பிணித்துக் கட்டிய சங்கிலியை அவிழ்த்து விட்டு விட்டால்...? அவர்கள் நிஜ உருவங்களைக் காண வாய்ப்பு வந்து விடுகிறது. நிஜ உருவங்களின் நீர்மையை அறிந்த பிறகு – பார்த்து உணர்ந்த பிறகு – முன்போல் நிழல் உருவங்களை நிஜ உருவங்களாக மதித்துக் காண மாட்டார்கள் அல்லவா?

கிளௌகான் : ஆம்! சாக்ரட்டீஸ் பெரியவரே! உண்மையைக் கண்ட பிறகுஉண்மையின் நிழலை எப்படி உண்மையாக ஏற்பார்கள்? மேலே சொல்லுங்கள். கதை சுவாரஸ்யமாக இருக்கிறது! உம்...... சொல்லுங்கள்!

சாக்ரட்டீஸ் : "முதலில் எவராவது ஒருவரைக் கட்டவிழ்த்து விடுதலை செய்வதாக வைத்துக்கொள்ளுங்கள். திடீரென எழுந்து நிற்கும்படியும், கழுத்தைத் திருப்பிப் பின்னாலும் பக்கவாட்டத்திலும் பார்க்கும்படியும், நடந்துபோய் வெளிச்சம்வரும் குகை வாயிலுக்குப் போகும் படியும் பணித்தால் என்னவாகும்? உடல் முழுதும் கடுமையாய் வலிப்பதையும், கண் எரிச்சலையும் அவன் உணர்வான். கண்கூச்சல் அவனுக்குத் தொல்லையாகத் தெரியும். உண்மைப் பொருள்களைக்கூட அவனால் உற்றுநோக்க முடியாமல் போய்விடும். கட்டுண்டு கிடந்த நிலையில் அவன் கண்டதெல்லாம் நிழல் உருவங்களையே - நிஜ உருவங்களை அல்ல; எவரேனும் ஒருவர் அவனுக்கு விளக்கம் புரிந்தால் தான் அவன் உண்மை நிலையை அறிந்து கொள்ள முடியும். அவன் முன்னர்க் கண்டதெல்லாம் மாயாக் காட்சிகள் என்றும், அவன் தற்போது காண்பதுதான் மெய்க்காட்சி என்றும் அவனால் புரிந்துகொள்ளமுடியும். அவன் மேலும் மேலும் உண்மைப் பொருள்களை நெருங்கி அணுகிப்பார்த்தால், அவன்

உண்மையான நிலையை (real existence) மேலும் நன்ருக அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் தானே?

இது வெள்ளிடை மலையாக விளங்குவது அல்லவா? அவன் குகையை விட்டு வெளியுலகுக்கு வந்தால் - காணப்படும் உலகிற்கு வந்தால் அவன் முதலில் வடிவங்களைக் (Forms) காண நேர்கிறது. வெளிச்சத்தைப் போய் வெளியே நேரடியாகக் காணும்படி அவன் வற்புறுத்தப்பட்டால், அவனுக்குக் கண்ணிலே வலி காண்கிறது. உடனே அவன் தன் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு, வேறு காட்சிப்பொருள்கள் எவற்றைக்காணமுடியுமோ, அவற்றைக் காணமுயல்கிருன். அவன்பால் காட்டப்பட்ட பொருள்களைத் தெளிவாக அவனுல் தற்போது காணமுடிகிறது அல்லவா!"

கிளௌகான்: உண்மைதான்! உண்மைதான்! வெளியுலகுக்கு வந்தால் ... ...?

சாக்ரட்டீஸ்: விடுதலைசெய்யப்பட்டவனை வேண்டாவெறுப்பாக, மேலே உயர இழுத்துக் கொண்டுபோய், சூரிய வெளிச்சத்தின் முன்னே வற்புறுத்தி நிறுத்திஞல் என்ன ஆகும்? அவனுக்கு வலியும் எரிச்சலும் உண்டாகும் அல்லவா? அவன் கதிரொளியைக் கண்ணுல் நெருங்கிப் பார்க்கப் பார்க்க, அவனது கண்கள் கடுமையாகக் கூசத் தொடங்குகிறது. உண்மை நிலைகள் அவனுக்குக் காட்டப் பட்ட அத்தனையும், ஒன்றைக் கூட அவனுல் ஒழுங்காக அறிய முடியாது போய் விடுகிறது.

உண்மை அறிவு நிலை (real knowledge) அவன் கண்களைக் குருடு போல் ஆக்கும் சூழல் நிரந்தரமாக நிற்பது இல்லை. படிப் படியாக அந்நிலை பறந்து போய் விடுகிறது அல்லவா? குகையை விட்டு வெளிவந்த நிலையில் அவன் காணும் காட்சிகளை அவன் பழக்கப் படுத்திக் கொண்டு விடுகிருன். முதலில் அவன் நிழல் உருவங்களை நன்ருகப் பார்க்கிருன். அதன் பின் நிஜஉருவங்களின் பிம்பங்களை - மனிதர், பொருள்கள், பொம்மைகள் அவற்றின் பிம்பங்களைத் தண்ணீரில் அவனுல் நன்கு பார்க்கமுடிகிறது. அதன் பின் நிஜ உருவருங்களையே நேரடியாகப் பார்க்கும் நிலைக்கு உயர்ந்து விடுகிருன். அதன் பின் விண்மீன்களையும், மதியத்தையும், வானத்தையும் நன்ருகப் பார்க்க அவனுல் முடிகிறது. அதன் பின் பகலில் கதிரவனையும் நன்ருகப் பார்க்க முடிகிறது அல்லவா?

கிளௌகான் : ஆம்; நிச்சயம் முடியும்!

சாக்ரட்டீஸ் : "இறுதியில் கதிரவனைக் காணும் அளவுக்கு அவன் உயர்ந்த பிறகு அவன் கதிரொளியில், தன் கண் ஒளித்

துணைக்கொண்டு தன்னையே பார்த்துக்கொள்ள முடிகிறது. அவன் தன்னிடத்திலேயே தன்னை நன்ருக அறிந்துகொள்ள முடிகிறது; வேருேர் இடத்திலிருந்து பார்க்கவேண்டுவதில்லை. இந்த நிலையில் அவன் தன்னைத் தானே சிந்தித்து உணர முடிகிறது."

இந்த உருவகக் கதையை வைத்துக்கொண்டு சாக்ரட்டீஸ் அறிவுநெறிக் கோட்பாட்டினைப் (Theory of Knowledge) பின்னர் விளக்க முற்படுகிருர்.

உருவகக் கதையின் உட்பொருள் :

"கிளௌகான்! இந்த முழு உருவகக் கதையும் பொருள் பொருந்தியது ஆகும். அந்தக் குகை சிறைக் கூடம், காட்சியாகக் காணும் நம உலகம் என்றுகொள்! தீக்குண்டத்தின் வெளிச்சம் கதிரவன். குகையடியில் இருந்து அதனைக்கடந்து மேல்ஏறிவருவது ஆன்மா ஞானமார்க்கத்தை நோக்கி முன்னேறுவதைக் குறிப்பதாகும். இப்படியொரு விளக்கம் தருகிறேன். இப்படி ஓர் எளிய நம்பிக்கையை நான் கொண்டுள்ளேன். இது சரியோ? சரி இல்லையோ? கடவுளுக்குத்தான் தெரியும். சிந்தித்துப் பாருங்கள்.',

அடுத்து இதைத் தொடர்ந்து தான் பிளேட்டோ கொண்ட கருத்துக்கள் கோட்பாடு அல்லது வடிவங்கள் கோட்பாடு (Theory of Ideas or Forms or Theory of Idealism) பிறந்தது. அதைப்பற்றி அடுத்த இதழில் சிந்திப்போம். அதை நன்கு புரிந்து கொள்ள இந்தக் குகை உருவகக் கதை உதவுகிறது.

ஆதார நூல்கள் :

100 Great Thinkers by Dr. Jay E. Greene.
Living Biographies of Great Philosophers by Thomas & Thomas
A History of Western Philosophers by Bertrand Russell.
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Strole
Students' History of Philosophers by Arthur Kenyon Rogers.
Get to know Philosophy By Hugh Harris.

(தொடரும்)

திருவேணி சங்கமத்தில் சரஸ்வதி நதி

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் 81 ஆவது பீடாரோகண விழாவிற்கு (1—3—87) அன்று எழுந்தருளியபோது அப்பீடத்தின் ஆசாரியர்களாக விளங்கும் மூவரில் பெரியவர்களும் இளையவர்களும் மட்டுமே காஞ்சியில் இருந்தனர். ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வடநாட்டு யாத்திரைக்குச் சென்றிருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காமகோடிபீடம் திருவேணி சங்கமம் போல மூன்று ஆசாரியர்களைக் கொண்டு புனிதத் திருமடமாக இலங்குகிறது என்றும், திரிவேணி சங்கமத்தில் இரண்டு நதிகளே காட்சிதரும், சரஸ்வதிநதி அந்தர் வாகினியாக இருப்பது போல ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள் வடநாட்டு யாத்திரையில் இருப்பதால் மறைவாக இருக்கிறார்கள் என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டு அருளினார்கள்.

அண்மையில் 29—1—88 அன்று தருமை ஆதீனத்துக்கு வருகை தந்த ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இதைத் தெரிவித்து மகிழ்ந்தார்கள்.

ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள், சரஸ்வதிநதி அந்தர் வாகினியாக இருப்பது உண்மை. இந்நதி உத்தரப்பிரதேசத்தில் குருக்ஷேத்திரத்திலும், குஜராத்தில் சோமநாதத்திலும், அகமதா பாத் அருகில் சிந்துபூரிலும், பத்ரிநாத்தில் விஷ்ணுப் பிரயாகை யாகவும் வெளிப்படுகிறது.

பூமிக்கு அடியில் ஆறுகள் மறைவாக இருந்து நம்மை ரக்ஷிக்கின்றன. அவ் ஆறுகளின் நீரை வெளிக்கொணர்ந்தால் பல ஆண்டுகளுக்கு நம் நாட்டில் தண்ணீர்ப் பஞ்சமே நீங்கிவிடும் என்று கூறியருளினார்கள்.

உடனிருந்து கேட்டு எழுதியவர் :—

திரு. வி. சா. குருசாமி தேசிகர்.

திருமுறைகளில் மன வலிமை

புலவர் திரு. வா.ச. சுந்தரேசம் பிள்ளை

(1) ஊனுக்கும் உடைக்கும் பொருளுக்கும் உருகி மனம், தடுமாறுகிறது. வீணான துயரத்தில் வீழ்ந்து மனம் வேறு துணை காணாமல் துவளுகிறது. வளைத்து வருத்தும் இனத்துயரம், உறவுத் துயரம், காட்சித் துயரம், மொழித் துயரம், கலைத்துயரம் இப்படிப் பல துயரங்களில் மனம் சிக்கித்தவிக்கின்றது. 'தொல்லைக் குடும்பத் துயரதனில் தொலைத்தேன் அந்தோ காலமெல்லாம்' என்று மனம் ஏங்குகிறது. இதனால் கவலையாகிறது. இரத்தம் சுவறுகிறது. உடல் இளைக்கிறது. வாழ்நாள் சுருங்குகிறது. குருட்டுக் குழந்தை இருட்டறையில் குமுறுவது போல் உலகக் காட்சியையோ நலன்களையோ அனுபவிக்க இயலாமல் தவிக்கின்றது. அடுத்தவர் வருத்தம் நமக்கு ஏன் என்று அகன்று செல்லும் கருங்கல் மனத்தையும் காணமுடிகிறது. கள்ளுண்ட மந்தி போல் காலமெல்லாம் கலங்கிப் பிறரையும் கலக்கி வரும் மனத்தையும் கடல் அலைபோல் ஒன்றன்பின் ஒன்றாகக் காண்கின்றோம்.

பிறர் நிழலிலேயே வாழும் ஒருவனுக்கு ஒரு சிறுதொகை கிடைத்தாலும், சிறு பதவி கிடைத்தாலும் தன்னைக் குபேரனாகவும், இந்திரனாகவும் எண்ணி இறுமாப்புக் கொள்கின்றான். அந்தச் செருக்கினால் பயனில்லாத கொடுஞ்சொல் பலவற்றைப் பெரியோர் சிறியோர் என்று பாராமல் பேசுகிறான். பிறரை வருத்தவும் செய்கின்றான். இந்த அவலப்போக்கையும் கண்டு அகம் குழைகின்றோம்.

நில்லாத உடம்பை நிலையானது என்றே மனிதன் எண்ணுகின்றான். இதனால் பொல்லாத நெஞ்சனாகின்றான். புலால் உண்ணும் நிலையனாகவும் ஆகின்றான். மனக்கவலை மாறும் என்று மதி மயங்கி மதுவைக் குடித்து வீணாக மடிகின்றான். சொல்லாத சொல்லால் எல்லோரையும் வருத்துகிறான். அதனால் வரும் விளைவுகளால் மனநோய்க்கும் உடல்நோய்க்கும் ஆளாகின்றான். மனச்சோர்வுற்று அலைகின்றான். உலகில் எல்லாவற்றையும் காணாமல், கண்டு அனுபவிக்காமல் விளக்கைப் பழமென்று நம்பி விழுந்து மடியும் விட்டில் பூச்சியாக வீணாக மடிந்து விடுகிறான். இதுவும் ஒரு தற்கொலைக்குச் சமம் என்பதையும் உணராமல் மறைந்து விடுகின்றான். அந்தோ பரிதாபம்!

மலையளவு செல்வமிருந்தாலும் கடுகளவு துயரம் வந்தால் கப்பல் மூழ்கியது போல் மனம் கலங்கி மாள்கின்ருன். எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று உதட்டளவிலே உரைப்பான். உள்ளத்தில் உறுதியாகப் பற்ற மறந்து விடுகிருன். மனப் பயத்தால் மண்ணில் நடைப் பிணமாகத் திரிகிருன்.

இத்தகைய அவலமான நிலைகளுக்கு - மனவலிமையில்லா நிலைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணம் சான்ருண்மை மிக்க ஆன்ருேர்களைத் துணையாகக் கொள்வதில்லை. அருளாளர்களின் சரித்திரங்களைப் படிப்பதல்லை. கேட்பதுமில்லை என்பது தான்.

''பிறர்க்கின்ன முற்பகல் செய்யின் தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும்''

என்ற அறிவுரை விளக்கத்தைக் கூறுவோரும் குறைவு. அதைக் கேட்போர் அவரினும் குறைவு.

பயம், பக்தி, ஒழுக்கம், உண்மை நிலை இவைகளின் பக்கம் மனம் திரும்புவதே இல்லை.

நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள் என்பதைவிட நம்மைப் பற்றி நாமே நினைப்பதில்லை.

செடி, கொடி, பயிர், பச்சிலை வளர்வதற்கு என்னென்ன தேவையோ அதுபோல் நம் பண்புகள் வளர, வாழ்வு வளம்பெற, மன உறுதிபெற நல்லோர்கள் தொடர்பும், அவர்கள் சரித்திரப் படிப்புமே பெருந்துணை புரியும்.

காற்று எவ்வளவு தூயதாக இருந்தாலும் மணமுள்ள பூச்செடி வழியாக விசினல் நன்கு நுகரமுடிகிறது. மனம் சாந்த முறுகிறது. முகத்திலே ஒரு மறுமலர்ச்சி பூக்கிறது. அக்காற்று மலக்குழி, சாக்கடை வழியாக விசினல் நுகர முடிகிறதா? இதுபோல் தான் நாம் காற்ருகி நல்ல அருளாளர்கள் யார் யார் என்பதை ஆராய்ந்து அவர்களின் துணையைக் கொண்டு அவர்களின் வாழ்க்கை வழி நுழைய வேண்டும். அப்போது தான் நம் வாழ்வில் நல்ல மணம் வீசும். புகழ் மணம் கமழும்.

கானலையே நீராகக் கருதுகின்றேன்
கள்ளமனப் புல்லரையே விரும்புகின்றேன்
ஊனடைக்கும் ஊனுக்கும் உலவுகின்றேன்
உற்றமனை மக்களுக்கே உழலுகின்றேன்

பானமென மதுவருந்தி மயங்கு கின்றேன்
பாரிலுள்ள பொருளின்றிப் பதறுகின்றேன்
ஏனிந்தப் பிறவியென ஏங் கின்றேன்
என்பவரே மலிந்து விட்டார் இறைவா! ஏனோ?

(2) காலைக் கதிரவன் ஒருவன் எழுந்து விட்டால் இரவு முழுதும் மண்டிக் கிடந்த இருள் மறைந்து விடுகிறது. எந்தப் பொருளும் கண்களுக்குப் புலனாகின்றது. இதுவன்றி வெப்பம் ஏற ஏற, சேறாக இருந்தது வற்றி இறுகுகிறது. உறுதியாக இருந்த மெழுகு உருகுகிறது. ஒரே சூரிய ஒளி இரு செயல்களைச் செய்கிறது. இதுபோல் நல்வினை செய்தவன் இன்பத்தைப் பெறுகிறான். தீவினை செய்தவன் துன்பத்தைப் பெறுகின்றான். நோயுள்ள குழந்தைக்குத் தாய் மருந்து கொடுத்துப் பட்டினி போடுகின்றாள். நோயற்ற குழந்தைக்குத் தாய் வயிறு நிறைய உணவு தருகின்றாள். இப்படிச் செய்வது தாயின் குற்றமாகுமா? ஆகாது. இதுபோல் அவரவர் நல்வினை தீவினைகட்கு ஏற்ப இறைவன் இன்ப துன்பங்களையூட்டு கின்றான். இந்த உண்மையை ஒவ்வொருவரும் உணர்ந்து கொண்டால் துன்பமும் இன்பமாகவே தோன்றும். மனம் பக்குவம் பெறும். மன வலிமை துளிர்விடத் தொடங்கும்.

பேருந்து வண்டியை இயக்குபவன் இருந்தால்தான் உள்ளுறுப்புக்கள் யாவும் வேலை செய்யும். இதுபோல் உலகை இயக்குபவன் ஒருவன் உண்டு. அவன் பல பெயரில் பல விடங்களில் பலரிடமும் இருக்கின்றான். அவனால்தான் இந்த உலகம் இயங்கு கின்றது என்ற உண்மை ஞானம் பலருக்கும் வேண்டும்.

இரு கண்களும் ஒரே பொருளை ஒரே விதமாகக் காண்பது போல இன்பமும் துன்பமும் ஒன்றாகவே நோக்கும் ஆண்மை வீரத்தைப்பெற்றிருந்த ஆன்றோர்களை நினைத்துப் பார்க்கவேண்டும். சாநாளும் வாழ்நாளும் யார் கணக்கெடுத்துக்கூறமுடியும்? நெஞ்சம் நன்னெஞ்சமானால் நஞ்சும் அமுதாக அல்லவா ஆகிவிடும். பிஞ்சு நெஞ்சில் நஞ்சு கலந்தால் அவன்தான் வாழ்வானா? பிறரை வாழ வைப்பானா? மாட்டான். ஆகவே, மனவலிமைக்கு மருந்து ஆன்றோர் அருள் வாழ்க்கை ஒன்றேயாகும்.

மண்ணையும் பொன்னையும் ஒன்றாகவே மதிக்கும் மனப்பக்குவம் உடையவரே அருளாளர்கள். பூசும் வெண்ணீறுபோல் உள்ளமும் புனிதத் தன்மை பெற்றவரே அருளாளர்கள். அவர்களையே நாம் "நாயனார்" என்கின்றோம். "திருத்தொண்டர்" என்கின்றோம். அவர்கள் பொன்னடி பரவிப் போற்றுகின்றோம். அவர்களது தொடர்பையே அவர்களது வழியையே, அவர்களது மனப்பக்குவத்தையே நாம் பின்பற்ற வேண்டும். அவர்கள் வழி எளியது. ஆனால் உயர்வுடையது. அனைவரும் பின்பற்றத் தக்கது.

பகைவர்களான சமணர்கள் கொல்களிற்றை ஏவியபோதும், "உடையார் ஒருவர்தமர் நாம், அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை" என்று திருநாவுக்கரசர் மன வலிமையுடனே நின்றார். கல்லில்கட்டி கடலில்போட்ட பொழுதும் "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று அவன் நாமத்தை நவிற்றி வெற்றிபெற்றார். இறுதியில் திருக்கயிலை சென்ற போதும் தடை. அப்போதும்,

"ஆளும் நாயகன் கயிலை கண்டு அல்லால்,
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்"

என்ற மலை போன்ற மனவுறுதியைக் காட்டினார். கயிலையண்ணல் விண்ணிலே மறைந்து அசரீரி பகர்ந்தபின் கண்ணினால் கயிலையைக் காண்பேன் என்ற உறுதிப்படி திருவையாற்றிலே கண்டு கண் பெற்ற பயனையும், மன வலிமைப் பயனையும் ஒருசேரப் பெற்றார். பொய்யராம் அமணர்கள், அடியார் பலருடன் அமர்ந்திருந்த மாளிகைக்குத் தீயிட்டு அழிக்கத் தொடங்கிய போதும், மங்கையர்க்குத் தனியரசியான பாண்டிமா தேவி மனங்கலங்கிச் 'சிறுகுழந்தையை சமணர்கள் யாது செய்வார்களோ' என்று தவித்தபோதும், 'ஐயனே அஞ்சல் என்று அருள்செய்' என்று வேண்டினர்,

"மானினேர் விழி மாதராய் வழு திக்கு மாபெருந்தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவன் என்று நீ பரிவெய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல் சேர்
ஈனர்கட்கு எளியேனலேன் திருவாலவாய் அரன் நிற்கவே"

என்று பாண்டிமா தேவிக்கு ஆறுதல்மொழி பகன்றார், பாலருவாயர் அஞ்சா நெஞ்சுடன் இருந்தார். இந்த அஞ்சாமை ஆலவாய்ச் சிவனால் வந்தது, அரசனாலோ, அன்பராலோ, அதிகாரத்தாலோ பதவியாலோ, பணத்தாலோ அஞ்சாமை வந்தால் அது நிலைக்காது, பஞ்சில் தீபோல் தீய்ந்து பறந்து விடும், ஆனால் பரமன் அருளால் வரும் மனவலிமையே மலையினும் மாணப் பெருமையாகும். அனைத்துத் துயரங்களிலும், போட்டிகளிலும் வெற்றியே பெற்றார் ஞானசம்பந்தர். அடியார்கட்கு வருந் துயரம் தீயினில் தூசாக மறைந்தழியும் என்பதை மன வலிமையில்லாத நாம் நன்கு உய்த்துணர வேண்டும்.

(3) நம் உடலுக்கு ஆதியாய் இருப்பது நம்மைப்பெற்ற தாய். நம் உடலுக்குப் பகவனாய் இருப்பது நம்மைப் பெற்ற தந்தை. நம் உயிருக்குத் தாயும் தந்தையுமாய் இருப்பது சிவசக்தி. இந்த உண்மைகளை உணர்த்துவன நமது சாத்திரங்களும் தோத்திரங்களும் ஆகும்.

உயிருக்கு ஆன்மா என்றும் பசு என்றும் பெயர். இந்த ஆன்மா நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத் தன்மையுடையதாய், சார்ந்தததன் வண்ணமாய், சரீரந்தோறும் வெவ்வேறாய் வினைகளைச் செய்து வினைப் பயன்களை அனுபவிப்பதாய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையதாய், ஒரு தலைவனை உடையதாய் இருக்கும் என்று பெரியோர்கள் கூறும் உண்மையை நன்கு உணரவேண்டும்.

உயிரோடு கூடிய மனித உடல் எடுத்தது எதற்கு? நாமாக எடுத்துக்கொண்டதா? ஒருவனால் தரப்பெற்றதா? என்ற வினாக்கள் மிக மிக முக்கிய வினாக்களாகும். இப்பிறப்பு உண்டு, உடுத்து, உறங்கி வாழ மட்டும் கிடைத்ததல்ல. உண்டாலும், உடுத்தாலும், உறங்கினாலும் அவை தூயதாக, நல்வழியில் அமைந்ததாக இருக்க வேண்டும். தீயதாக அமைந்து விட்டால், பிறவிதோறும் துன்ப இருளிலேயே சிக்கித் தவிக்க வேண்டி வரும். ஒருவனால் கொடுக்கப் பெற்றது உடல், அவ்வொருவனாலேயே தரப்பெற்ற உலகப் பொருள் என்றெண்ண வேண்டும். உழைத்து அறவழியில் ஈட்டிய உணவு கூழாயினும், உடை கந்தலானாலும், அவை அமிழ்தமும், தங்க உடையுமாகும் என்றெண்ண வேண்டும்.

நெருப்பில் படுத்து உறங்கினாலும் உறங்கலாம், ஆனால், கவலை யில் படுத்து உறங்க முடியுமா? முடியாது. முன்வினைப் பயத்தால் துன்பம் வந்துற்றபோதும் முழு முதல்வனையே துணையாகப்பற்ற வேண்டுமேயன்றி மூர்க்கத் தனத்தில் இறங்கி ஆசைக்கு அடிமை யாகித் தீவினைகளைச் செய்தால் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாகிவிடும். ஆகவே, வெள்ளத்தில் சிக்கித் தவிக்கும் ஒருவன் மரத்துண்டைப் பிடித்துக்கொண்டு கரைசேர்வது போல் நமது துன்பக் கடலைக் கடக்க - பிறவிக் கடலை நீந்த ஒரு தெப்பம் வேண்டுமல்லவா? அந்தத் தெப்பந்தான் சிவபெருமான் திருவடி. அதுவே அருள் அடி.

"தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது"

என்ற வள்ளுவனார் வாக்கை உன்னுக.

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன தாவரம் ஆகிய எழுவகைப் பிறப்புகளும் கரு, முட்டை, வேர்வை' வித்து ஆகிய நான்கு வகைகளுள் பிறந்தன. இப்படி உலகில் பிறந்துள்ள யோனி பேதங்கள் (பிறப்பு உருவங்கள்) எண்பத்து நான்கு இலட்சமாகும். இவைகளுக்கெல்லாம் பலகோடி மடங்கு உயர்வுடைய பிறப்பு நாம் எடுத்துள்ள மனிதப் பிறப்புதான். ஆதலினால்தான்,

"இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

என்றும், "வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்" என்றும் நம் திருநாவுக்கரசு நாயனார் மனித்தப் பிறப்பைச் சிறப்பிக் கின்றார். இப்பிறவி உயர்ந்தது எனில், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களோடு மாயேயம், திரோதாயி ஆகிய இரண்டும் சேர்ந்து ஐந்து பாசங்களை உடையதாக நம்முயிர் இருக்கின்றது. ஆணவம் செம்பிற் களிம்பு போல உயிரில் (ஆன்மாவில்) அநாதி காலந்தொட்டே கலந்து நிற்கின்றது. ஆகவே, அறிவையும் தொழிலையும் மறைத்து விடுகிறது. அநேக சக்திகளை யுடையதாகி சடமாயிருக்கிறது.

தனு – உடல். கரணம் – மனம் முதலிய கருவி. புவனம் - உடலுக்கு ஆதாரமான உலகம். போகம் - அநுபவிக்கும் பொருள். இந்த நால்வகைகளையும் சிவபெருமான் நம்மீது உள்ள கருணையால்

அளித்துள்ளான். இப்பெரிய நன்றியை அறியும் அறிவுடையவர்களாக ஆகும் திறமை இம்மனிதப் பிறவிக்கே உரியதாகும்.

> "என்னை நினைந்து அடிமை கொண்டு என் இடகெடுத்துத்
> தன்னை நினையத் தருகின்றான்"

என்று நம்பியாண்டார்நம்பியும் கூறுகின்றார். இறைவன் கடமையும், நம் கடனையும் விளக்க வந்த அப்பர் பெருமான்,

> "தன்கடன் அடியேனையும் தாங்குதல்
> என்கடன் பணி செய்து கிடப்பதே" – என்கிறார்.

வாங்கிய கடனைத் திரும்பக் கொடுப்பது என்பதும் மிகப்பெரிய பண்பல்லவா? 'அவன் நம்மைக் காப்பான். நாம் அவனுக்குப் பணி செய்வோம்' என்ற மனவலிமை ஒன்றுதான் மனிதப் பிறவி எடுத்தோர்க் கெல்லாம் வேண்டும். இதுவே உயர்ந்த நன்றிக் கடனுமாகும்.

இந்தப் பிறப்பில் சிறப்பு, மனவலிமை, நன்றியுணர்வுடைய எவரும் மலையே இடிந்து விழுந்தாலும் நிலை கலங்கமாட்டார்கள் என்பது உறுதி. பிறரை நிலைகலக்கி விட மாட்டார்கள் என்பது அதனினும் உறுதியாகும்.

> "மலையே வந்து வீழினும் மனிதர்காள்
> நிலையினின்றும் கலங்கப் பெறுதிரேல்!"

என்று நமக்கு மனத்துணிவை யூட்டுகிறார் மருள்நீக்கியார்.

ஒருவன் தன்நிலை தளர்ந்தபோது பிறருக்குத் துன்பம் செய்து தனக்கு நன்மை தேடிக் கொள்ளும் கீழோரைத் தலையிலிருந்து நீங்கிக் கீழே விழும் மயிருக்கு ஒப்பானவன் என்று இடித்தும் இழித்தும் கூறுகிறார் திருவள்ளுவ நாயனார்.

> "தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
> நிலையின் இழிந்தக் கடை."

உற்ற துன்பங்கள் முன் செய்வினையால் வந்தது என்று பொறுத்துக் கொள்வதுடன் பிற உயிருக்கு ஒருபோதும் துன்பம் செய்யாது இருப்பதுவே உயர் பண்பாளரின் ஒழுக்கம். தவம், தவச்செயல், இந்தநிலையில் உள்ளவர்களே மனங்கலங்காதவர்கள். அருளாளர்கள், நாயன்மார்கள். இடர்வரினும் தன்னைவருத்திக் கொள்வார்களேயன்றிப் பிற உயிர்கட்கு எட்டுணையும் இடர் புரியமாட்டார்கள். பிறஉயிர்கட்கு நேர்ந்ததையறிந்தால்இறைவனிடமே முறையிடுவார்கள். இறைவனுக்கே அடிமையான இவர்கள் உலக முழுதும் தன்னடிப்படுத்தி ஆளும் அரசனுக்கும் அடிபணிய மாட்டார்கள். மனித உரிமையோடு, சுதந்திரத்தோடு, "நாம் யார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்று இறுமாந்திருப்பார்கள். இத்தகையோரே மனவலிமையாளர். அவர்களின் அருந்துணை கொண்டு அவனியில் ஆனந்த வாழ்வு வாழ்வோமாக!

> "வானந்துளங்கில் என் மண் கம்பமாகில் என் மால்வரையும்
> தானம் துளங்கித் தலை தடுமாறில் என் தண்புனலும்
> மானம் படில்என் விரிசுடர் வீழில் என் வேலை நஞ்சுண்டு
> ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே."

திருமூலர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.எட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 7—2—1988 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

தருமை ஆதீனம் ஸ்ரீசொக்கநாதர் பூசைமடத்தில் தீபாராதனை ஆகிறது! அன்பர்கள் வழிபடுகின்றனர். பூசை நிறைந்தது. ஸ்ரீலஸ்ரீ குருமணிகள், 'அரஹர மகாதேவா' என்ற முழக்கம் எழப் பண்டாரக்கட்டிற்கு எழுந்தருளினார்கள்.

அன்று முதல் ஞாயிறு. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருமுறைப் பாராயணம் நிறைந்தது. அன்பர்கள் குருமணிகளை வழிபட்டனர். திருநீறு பெற்று அணிந்து மகிழ்ந்து அமர்ந்தனர்.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பெரிய புராணத்தின் வாயிலாகத் திருமுறை விளக்கம், சைவ சித்தாந்த நெறி விளக்கம், இனிய வாழ்வு நெறிகள் முதலியவற்றை அருளி வருகின்றார்கள். இம்மாதம் ஏயர்கோன் கலிக்காமர் வரலாற்றை மீண்டும் சுருக்கமாக அருளித் திருமூலர் வரலாற்றைத் தொடர்ந்தார்கள். ஒவ்வொரு மாத அருளுபதேசத்தின் போதும் அவ்வம் மாதங்களில் வரும் நாயன்மார் குருபூஜைத் திருநாட்கள் மற்றும் விசேஷ நாட்கள் பற்றி முதலில் பயன் தரும் பல குறிப்புக்களை வழங்குகின்றார்கள்.

ஏயர்கோன் கலிக்காமர் புராணம் சுந்தரர் வரலாற்றுத் தொடர்ச்சியாய் இருத்தலை நினைவு கூர்ந்து, ஏயர்கோன் கலிக்காமரின் பக்திமாண்பு, சுந்தரரை அவர் காணவிரும்பாமை, இறைவன் இருவரையும் இணைக்கும் இன்ப நிகழ்ச்சி ஆகிய புராண வரலாற்றுப் பகுதிகளைச் சுருங்க அருளிச் செய்தார்கள்.

திருமூலர் வரலாற்றைத் தொடர்ந்தார்கள். திருமூலர் திருமந்திரம் அருளிச் செய்த சிவயோகி. சிவ ஆகமங்களைத் தமிழில் அருளிய இவரது புராணத்தைச் சுவைபட விரித்துரைத்தார்கள்.

'நம்பிரான் திருமூலன்' - என்று திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் இவரைப் போற்றியுள்ளார்.

"குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன், குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூலன் ஆகின்ற அங்கணனே"

என நம்பியாண்டார்நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் இவர் வரலாற்றைச் சுருக்கமாக அருளிச்செய்கின்றார்.

திருக்கயிலைமலையில் முதற்பெருங்காவலாக விளங்குபவர் திருநந்திதேவர். இவரிடம் உபதேசம் பெற்ற நான்மறைச் சிவயோகியார் - பின்னர்த் திருமூலர் என வழங்கப்பெற்றவர். அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எண்வகை யோகசித்திகளும் கைவரப்பெற்றவர். இவர் நிலவுலகில் தென்பொதியமலையில்வாழும் அகத்தியரிடம் நட்புத் தொடர்பு கொண்டவர். இவர் அகத்திய முனிவருடன், உடனுகச் சிலநாள் தங்கியிருக்க எண்ணினார். வட கயிலையினின்றும் புறப்பட்டார்.

வழியில் பல தலங்களையும் வழிபட்டார். திருக்கேதாரம் சென்று தொழுதார். பசுபதிநாதம் (நேபாளம்) பணிந்தார். கங்கைத் துறை அடைந்தார். அவிமுத்தம் (காசி) அடைந்தார். விந்திய மலைச் சாரலில் உள்ள திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) சென்று இறைஞ்சினார். காளத்திமலை சேர்ந்து வழிபட்டார். இறைவன் திருவருட்கூத்து நிகழ்த்தும் திருஆலங்காடு சார்ந்து வணங்குகிறார். திரு ஏகாம்பரநாதரைத் தொழுது கச்சியில் சிலநாள் தங்கினார். சிவயோகியருடன் கலந்திருந்தார். அங்கிருந்து கற்புரிசை சூழ் திருவதிகை போந்து வீரட்டநாதரைத் தொழுதார். பெரும்பற்றப் புலியூராம் சிதம்பரம் அடைந்தார். சிலநாள் அங்குத்தங்கிருந்து சிந்தைமகிழ நடராசப் பெருமானின் திருக்கூத்துக் கண்டார். காவிரியின் வடகரை அடைந்தார்.

சேக்கிழார் அருளிச்செய்த காவிரிபற்றிய வருணனையைக் குருமணிகள் இலக்கியநயம் தோன்ற இடையே விளக்கம் புரிந்தார்கள். சிவபெருமானுக்கு அஞ்சாமல் நஞ்சு கொடுத்தது ஒருகடல், (அதுபாற்கடல) எனவே, நாட்டுககே நிறையவளங்களைத் தந்து கடலின் வயிற்றினைத் தனது நீரினல் நிறைக்காமல் விட்டது காவிரி, அதாவது - காவிரி கடலில கலக்கும்போது நீர் குறைவாக இருந்தது - எனச் சேக்கிழார் பாடினார்.

"தடநிலைமா ளிகைப்புலியூர் தன்னிலுறைந் திறைஞ்சிப்போய்
அடல் விடையின் மேல்வருவார் அமுதுசெய அஞ்சாதே
விடம் அளித்தது எனக்கருதி மேதினிக்கு வளம்நிறைத்தே
கடல் வயிறு நிறையாத காவிரியின் கரையணைந்தார்"

என்பது அப்பாடல். இதுபோன்ற தற்குறிப்புத் தோன்றப் பரஞ்சோதி முனிவர், திருவிளையாடல் புராணத்தில், வைகைபற்றி அருளிச்செய்தமையை ஒப்பிட்டமை சுவை கூட்டியது. வாத வூரடிகள் அவதரித்ததிருவாதவூர், வைகைக்கரையில் அமைந்தது என்பதை விளக்க வந்த முனிவர்,

"தொடுத்தவறு மையும்பயனும் தூக்கிவழங் குநர்போல
அடுத்தவயல் குளம்நிரப்பி அறம்பெருக்கி அவனிஎலாம்
உடுத்தகடல் ஒருவர்க்கும் உதவாத உவரிஎன
மடுத்தறியாப் புனல்வைகைக் கரையுளது வாதவூர்"

எனப்பாடியருளினர். உலகுக்கெல்லாம் பயன்தந்து, உவர்ப்புத் தன்மைகொண்டு ஒருவர்க்கும் கடல் உதவாமையால் அதனில் புகாமல் இருக்கும் வைகை என்று ஓதினர் – இங்ஙனம் கடல் புகுந்தும் கடல் வயிறு நிறையாத காவிரி, கணவன் வழிச் சென்றே அவனை நல்வழிப்படுத்தும் சோழர் குலப்பெண்மணிகளின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது. வைகை நதி கடலில் கலக்காமல் கன்னியாக இருப்பது கன்னியாக ஆட்சி செய்த தடாதகைப் பிராட்டியின் சிறப்பைப் புலப்படுத்துகிறது என்று ஒப்பீட்டு விளக்கம் அருளிச் செய்தமை இலக்கியச் செறிவு தோன்ற அமைந்தது.

காவிரி வடகரை வழியாகப் போந்து காவிரி நீராடிய சிவயோகியார், காவிரித் தென்கரை அடைந்தார். பசுவின் கன்றுக வடிவுகொண்டு உமாதேவியார் தவம்செய்த திருஆவடுதுறை அடைந்தார்; திருக்கோயில் வலம்வந்து பெருமானைத் தொழுதார். சிவயோகியாருக்கு அத்தலத்தை விட்டு நீங்காக் கருத்துத் திருவுளத்தில் மேவிற்று. ஒருநாள், அத்தலத்தில் காவிரிக் கரை வழியே சென்றார். ஒரு புறவில் (புதர் நிறைந்த பகுதி) பசுக் கூட்டங்கள் கூடிப் புலம்புவதைக் கண்டார்; எதிரே சென்றார். அவற்றை மேய்ப்பவன் சாத்தனூரைச் சார்ந்தவன். (சாத்தனூர் திருவாவடுதுறையை ஒட்டிய ஊர்) மூலன் என்னும் பெயருடைய வன்; வினைமாள இறந்துகிடந்தான். இறந்துகிடந்தமூலன்உடம்பைப் பசுக்கள் சூழ்ந்து நின்றுவருந்தின; ஏங்கின; கதறின. சிவயோகியார் இந்நிலை கண்டார். நம்பர் அருளாலே பசுக்கள் அடைகின்ற இத் துன்பத்தை நீக்குவேன் எனக் கருதினர். "இந்த இடையன் உயிர் பெற்றாலன்றி, இப்பசுக்களின் துயரம் தீரா; இவனோ வினைமாள வாழ்நாளை வெந்தொழில் கூற்றுண்ணக் கிடக்கின்றான்" எனத் திருவுளம் பற்றினர். பிரகாமியம் செய்யக்கருதினர். (பிராகாமியம் என்ற யோகம் பரகாயப் பிரவேசம். அதாவது தம்உடலைத் தனியே

விட்டுப் பிறர் உடலில் வாயுமூலமாக உயிரைச் செலுத்துவது) தம் உடம்பை ஓரிடத்தில் காவல் செய்து வைத்தார். தம் உயிரை மூலன் உடம்பில் செலுத்தினர்; திருமூலராய் எழுந்தார்.

பசுக்கள் மகிழ்ந்தன; துள்ளின; மூலரை மோந்தன. மூலர் பசுக்களின் மகிழ்ச்சி கண்டார்; பசுக்களை மேய்த்தார். துறையில் ஓட்டி நீர் அருந்துவித்தார். நிழற்பகுதியில் தங்குவித்தார். சூரியன் மறையும் நேரம் வந்தது. பசுக்கள் தாமே தம் கன்றுகளை நினைந்து சாத்தனூரைநோக்கிச் சென்றன. திருமூலர் பின் தொடர்ந்தார். பசுக்கள் தத்தம் வீடுகளை அடைந்தன. மூலர் நின்றிருந்தார்.

மூலன் என்ற இடையனது மனைவி பொழுது கழிந்த பின்னும் தன் நாயகன் வாராமை எண்ணினள். அச்சத்துடன் தேடினள். திருமூலர் நின்றிருந்த இடம் சேர்ந்தாள். நின்ற நிலைகண்டாள்; வெருண்டாள்; திருமூலரின் மெய்யைத் தீண்டினள். சிவயோகி யாராம்மூலர் இதற்கிசையாது 'உனக்கு என்னோடொத்தொடர்பும் இல்லை' என்றார். உடன் அகன்றார். அங்கிருந்த ஒரு பொதுமடத்துட் புகுந்தார். சிவயோகத்தில் அமர்ந்தார்.

மூலன் மனைவி அன்றிரவு துயில் கொள்ளாமல் வருந்தினள். அவள் தன் கணவனைத் தவிரப் பிறசுற்றம் இல்லாதவள். பொழுது விடிந்தது. பலர் முன்னிலையில் தன் நிலைமை பற்றிக் கூறினள். இது கேட்ட நல்லோர் சிலர் திருமூலர் முன் வந்தனர். அவர் தன்மை நோக்கினர். "இது பித்து உற்ற மயக்கு அன்று; பிறிது ஒரு சார்பு உடைத்தன்று. இவர் சிவயோகி" என உணர்ந்தனர். மூலன் மனைவியை அணுகினர். மூலர்நிலைகூறி, "இவர்சுற்றத்தோடு கூடார்" எனக் கூறினர்.

மூலர் சிவயோகத்திலிருந்து எழுந்தார். முன்னைநாள் ஆநிரைகள் ஊரைநோக்கி வந்த வழியே ஏகினர். தாம் காவலாக வைத்திருந்த தம் முன்னைய உடலை வைத்த இடத்தில் தேடினர். உடல் காணப்பெறவில்லை. முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானத்தால் ஆராய்ந்தார். 'சிவபிரானர் அருளிச்செய்த சிவாகமங்களின் பொருளைத் தமிழிலே தாம் வகுக்கும் பொருட்டுத் திருவருள், தம்முடம்பை மறைப்பித்தது' எனச் சிந்தையால் உணர்ந்தார். தம்மைச் சுற்றமாகக் கருதி வந்த இடையர்களுக்கு உண்மைநிலை முழுதும் உரைத்தார். பின்னர் அங்கிருந்து திருவாவடுதுறை சேர்ந்தார்.

திருக்கோயிலை அடைந்து வணங்கினர். கோயிலின் மேற்புறம் சார்ந்தார். அரசமரத்தின் கீழ் யோகாசனத்தில் அமர்ந்தார்.

சிவராஜ யோக நிட்டையில் நின்றார். உலகினர் உய்யத் திருவுளம் பூண்டார். ஞானம், யோகம், கிரியை, சரியை முதலிய நான்குவகை நெறிகளையும விரித்துக் காட்டும் திருமந்திரமாலை யாகிய திருமந்திரம் பாடினார். ஓராண்டுக்கு ஒருபாடலாகச் சிவபரம் பொருளைப்போற்றி "ஒன்று அவன்தானே" என்று தொடங்கிப் பாடினார். மூவாயிரம் ஆண்டுகள் இந்நிலவுலகில் சிவயோகத்தி லிருந்து மூவாயிரம் பாடல்கள் பாடினார். பின்னர்த் திருக்கயிலை நண்ணி இறைவன் திருவடி நீழல் மேவினார்.

வரலாற்றுக் குறிப்புக்கள் அருளிய குருமணிகள் மூலன் என்ற திருப்பெயர் 'மூலமாக உள்ளவர்' என்ற பொருளது எனக்குறித் தார்கள். "மூலன் மரபில் வரு மோனகுரு" என்று தாயுமானார் அருளிய தொடரைக் குறிப்பிட்டுத் திருமூலர் மரபு என்ற குருமரபு பற்றி விளக்கம் அருளினார்கள். மேலும் திருமந்திரப் பொருள் நிலையை - ஒன்பது தந்திரங்களில் கூறப்பெறும் சிறப்புக்களைத் தனியே ஒருபோது விளக்கம் அருளவிழையும் திருவுளக்கிடக்கையை வெளியிட்டார்கள். "யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை', "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" "ஒன்று அவன்தானே; இரண்டவன் இன்னருள்" - முதலாகத் தொடங்கும் பாடல்களைக் குறித்தருளித் திருமூலர் அருள்நெறிச் சிந்தனை வழங்கினார்கள்.

திருமந்திரம் பற்றித் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் திருச்சி வானொலி நிலையத்தில் 22—11—75, 24—11—75, 26—11—75, 29—11—75 ஆகிய நாட்களில் இலக்கியச் சோலைப் பகுதியில் வழங்கிய அருளுரை - திருவருட் செய்தி-இரண்டாம் பாகத்தில் [தருமை ஆதீனப் பதிப்பு] பக்கம் 85 முதல் 113 வரை உள்ளது. படித்து, உளங்கொண்டு உய்யலாம்.

ஏயர்கோன்கலிக்காமர் புராண நிறைவும் திருமூலர் சிந்தனை யும் அன்றைய அருளுபதேசங்களாக மலர்ந்தன! இனிய உபதேசம் மனம் நிறைத்தது; இன்கனிச்சாறு தாகம் தணித்தது! தத்துவ நினைவுகளோடு இல்லம் ஏகினோம்!

திருமூலர் சிறப்பருளித் திருநெறியை வளர்விக்கும்
குருநாதர் திருவடிகள் கும்பிட்டுப் பயனுறுவோம்!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் சிவதலச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரபவ-மாசி - ஆயில்யத்திருநாள் 1—3—38 செவ்வாய்க்கிழமையன்று நாற்றிசை வள்ளல்களில் வாக்குக் காட்டும் வள்ளலாய் விளங்கி அருள்பாலிக்கும் பெருஞ்சேரி அருள்மிகு வாகீஸ்சுவரசுவாமி திருக்கோயிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பு வழிபாடு நிகழ்ந்தது. 'பெருஞ்சேரி ஸ்ரீ வாகீஸ்வரசுவாமி திருக்கோயில் சிறப்பு' என்னும் நூல் வெளியிடப்பெற்றது. வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., தலச்சிறப்புக்களை விளக்கி உரையாற்றினர். அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிறு தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம்பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்துவருகின்றது. இம்மாதம் 81 ஆவது அருளுபதேசம் 6—3—88 அன்று திருமுறைப் பண்ணிசையுடன் தொடங்கி நடைபெற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் இம்மாதம் தண்டியடிகள் நாயனர் புராண விளக்கம் அருளிச்செய்தார்கள். தண்டு கட்டிச்சென்று, நிறுவி, திருப்பணி செய்தவர், ஆதலால் தண்டியடிகள் எனப்பெயர் பெற்றவர் என்று பெயர்க் காரணம் அருளித் திருவாரூர்ச் சிறப்புக்கள் பலவற்றையும் தொகுத்துச் சுட்டினர்கள். பெருமான் ஆரூரில் எழுந்தருளி அருள்புரிதல் மிகத் தொன்மை யானது என்பதை 'ஒருவனய் உலகேத்த நின்றநாளோ' எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்கொண்டு மனம் பதிய விளக்கினர்கள். ஆரூர்த் திருக்கோயில்குடமுழுக்கு ஏப்ரல் நான்காம் நாள் நிகழ இருக்கும் இத்தருணத்தில் ஆரூரில் தொண்டாற்றிய தண்டியடிகள் நாயனர் புராணம் சிந்திக்கும் திருவருள் வாய்ப்பை வியந்துமுன்னைய அருளுபதேசங்களின் போதும் இத்தகு திருவருட் பொருத்தம் நிகழ்ந்திருத்தலைச் சுட்டி இறையருள் போற்றினர்கள்.

மயிலாடுதுறை அன்பர்களும், பக்தர்களும், ஆசிரியர்களும் அலுவலர்களும், மாணவர்களும் அருளுபதேசம் கேட்டும் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளைத் தரிசித்தும் பயனுற்றனர். அடுத்து 82 ஆம் அருளுபதேசம் 3—4—88 அன்று நடைபெறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுவாராக.

திருக்குவளையில் நெல்மகோற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்குவளை என வழங்கும் திருக்கோளிலி ஸ்ரீ தியாகராஜ சுவாமி தேவஸ்தானத்தில் 29—2—88 முதல் 4—3—88 வரை நெல் மகோற்சவம் மிகச் சிறப்பாக நடைப்பெற்றது. கோளிலிப் பதியில் வீற்றிருந்தருளும் எம்பெருமான் ஆலயத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் குண்டையூர்க்கிழார் தந்தருளிய நெல்மலையைச் சுவாமிகள் ஆரூருக்கு அட்டித்தருமாறு ஆளிடவேண்டிக் கொண்ட வண்ணம் இறைவன் ஆணையால் பூதங்கள் எடுத்துச்சென்றது முதலிய அற்புத வைபவங்கள் இம் மகோற்சவத்தில் நடைபெற்றன. 3—3—88 வியாழன் அன்று நெல்மலையை ஆரூருக்குச் சேர்ப்பிக்க இறைவன் கட்டளை இடும் உற்சவம் மிகச்சிறப்பான முறையில் நடைபெற்றது. பக்தர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

திருக்குறுக்கையில் மாசிமக ஏகதின உற்சவம்

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமானதும் அட்ட வீரட்டத் தலங்களில் காமனை எரித்த ஐதிகத் தலமும் ஆகிய திருக்குறுக்கை அருள்மிகு ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ வீரட்டேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 2—3—88 புதன்கிழமையன்று மாசிமக ஏகதின உற்சவம்மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ காமதகன மூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலாக் காட்சி நடைபெற்றது. பக்தர்கள் தரிசித்துப் பயன்பெற்றனர்.

திருபுவனத்தில் குருபூஜை விழா

தருமை ஆதீனம் பதினேழாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 7—3—88 திங்கட்கிழமை திருபுவனம் சந்நிதி வீதியில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை, மாலை இருவேளைகளிலும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. நண்பகல் மாகேசுவர பூஜை

நிகழ்ந்தது. மாலை 6 மணி அளவில் தருமை ஆதீனம் ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. தெ. இராசாமணி, எம். ஏ., பி. எஸ்சி., எம். எட்., 'குரு வழிபாடு' என்னும் பொருளில் சொற்பொழிவு ஆற்றினர். அன்பர்கள் குரு வழிபாடு ஆற்றியும் சொற்பொழிவு கேட்டும் பயன்பெற்றனர்.

தருமை ஆதீன சமயப் பிரசார நிலையம், சென்னை

மாதவழிபாடு

சென்னை, தருமை ஆதீன சமயப் பிரசார மாத வழிபாடு சென்னை, மேற்கு சி. ஐ. டி நகரில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயிலில் 28—2—88 ஞாயிறு மாலை சிறப்பாக நிகழ்ந்தது. திருமுறைப் பாராயணம் நடைபெற்றது. திரு. வி. நடராஜன் அவர்கள் தலைமை வகித்தார். கூட்டு வழிபாட்டின் சிறப்பினை விளக்கித் தலைமையுரை நிகழ்த்தினர். அன்பர் திரு. எம். ஆர். தாமோதரன் நன்றி கூறினர். மங்கல வாழ்த்துடன் கூட்டம் இனிது நிறைந்தது. அன்பர் பலர் வழிபாட்டில் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

கடிதம்

குத்தாலம் பாலு, குத்தாலம்,
'தினமணி' செய்தியாளர், 9—3—1988.

தருமையின் ஞான வேந்தர் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கட்குச் சிரம் தாழ்த்திய பெரு வணக்கம். 10—2—88 "ஞான சம்பந்தம்" தலையங்கம் படித்தேன். அரசியல்வாதிகள் முதல் பேரறிஞர்கள் வரை, இளஞ்சிறுர் முதல் பெரியவர்கள் ஈருக, கடைநிலை ஊழியர் முதல் மிகப்பெரும் அதிகாரிகள் வரை, படித்து உணர வேண்டியதாகும். ஒவ்வொரு வார்த்தையும் எதிர் கால நல்வாழ்விற்குப் படிக்கட்டுகளாக உள்ளன. "உடலும் உறுப்பும்" என்ற கடைசி வரிசை உயிர் ஓட்டமாக உள்ளதோடு உள்ளத்தைத் தொடும் நிலையில் உள்ளது. அனைவருக்கும் வருங்காலத்துக்கு இத் தலையங்கம் பாடமாக அமையட்டும். ஏனைய நாட்டுஒப்பீடு எம்மைத் தலைகுனிய வைக்கிறது. என்று திருந்துமோ எமது நாடு?

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிரபவஹூ மாசிமீ 1உ முதல் 30உ முடிய)

(14—3—1988 முதல் 12—4—1988 முடிய)

ஸ்ரீ பிரபவஹூ மாசிமீ 30உ பானுவாரம் உத்திராடநக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 56 நாழிகை 19 வினடிக்கு, கும்பலக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோகசுபிட்சார்த்தத்தை முன்னிட்டுக் கும்பராசியிலிருந்து மீனராசி சங்கிரமணமாகப் பங்குனி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். மறுதினம் சோமவாரம் பங்குனிமாத முதல்தேதி ஷடசீதி புண்ணிய காலம். பங்குனிமீ 5உ சுக்கிரவாரம் சைத்திர சுத்தபிரதமை சாந்திரமான வருஷாரம்பம், சாந்திரமான வருஷாதிபதி சுக்கிரன் கலியுகம் 5089 விபவ வருஷத்துக்கு இராஜாவாக வருகிறார். அவர் சாவனமான விபவவருஷத்துக்கு நவநாயகர்களில்மற்றவர்களையும் வானமண்டலத்தில் ஏற்படுத்திக்கொண்டு உலகத்தை சம்ரக்ஷித்து வருவார். சங்கிரமண கால கிரகஸ்திதியால் உலகில் இரும்புஎஃகுத் தொழில்கள் இயந்திரங்களில் உற்பத்திப்பொருள்கள் அதிகரிக்கும். ஆபரணம் மற்றும் நாகரிகப் பொருள்கள் உலக நாடுகளில் வியாபாரத்தினால் நல்ல பொருளாதாரம் ஏற்படும். எல்லாபிரஜைகளும் நல்லஜீவனம் செய்வார்கள். உலகெங்கும்உள்ளதிருமடங்கள் ஆசாரியபீடங்களில் பரமாசாரிய சுவாமிகளாக வந்துள்ள சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலகத்துக்கு மனுநீதியை இயம்புவார்கள். இளைய சமுதாயத்தினருக்கு நீதி உரைகள் தம் திருவாய் மலர்ந்து சொற்பொழிந்து அருள்வார்கள். உலகில் சிவதர்மங்கள் நீடிக்கவும் சிவாலயபூஜைகள் இனிது நடைபெறவும் மாந்தர்கள் சிவாசார நியமம் இறைவழிபாடு ஆகிய உயர்வழியில் திகழவும நற்போதனை செய்து ஆசியருள்வார்கள். தேவாலயங்களில் அறநெறியாளர்களின் சீரியதொண்டில் ஈசற்குச் சிறப்பு பூசனைகள் மஹோத்சவங்கள் நடந்துவரும். நாடுகளில் மாந்தர்கள் நலமுடன் வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலநை நடக்கும். நல்ல பணவருமானம் தரும். அரசகண்ய செலவினங்கள் தானதர்மம் செய்யும். மார்ச்சு 29 தேதிக்குமேல் ஓர் புண்ணிய ஸ்தலம் சென்று வருதல், மேடை பிரசங்கம் செய்தல், நல்லோர்களால் பாராட்டப் படுதல் ஆகும். நல்ல சுகானுபோகங்களை ஏற்படுத்தும். தாரபுத்திரர் களின் நலம்நன்ருக இருந்துவரும். ஏப்ரல் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் அரச கண்யத்திற்கு ஏற்ப வரும். பொது நலம் செய்யும். மார்ச்சு 25 தேதிக்கு எழுத்து மூலத்தில் ஓர் நன்மை ஏற்பட்டு வரும். நல்ல பூஷணம் தரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நல்ல பிரயோ ஜனமும் புகழும் தரும். வீடு வாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். எல்லாக் காரியங்களும் பெருமதிப்பில் நடந்து வரும். ஏப்ரல் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் பெரு மதிப்பில் வரவாகிக் கொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் அரசாங்கநன்மைகள் ஏற்படும். மார்ச்சு 26உ க்குமேல் ஸ்திரீ வழியினர் குல சம்பிரதாயங்களில் வைராக்கியப் போக்கில் நல்ல வகை செலவினை ஏற்படுத்தும். ஓர் நவீனப்பொருள் வாங்குதல்ஆகும். எல்லாக் காரியங்களும் இஷ்ட சித்தியாக நடக்கும். மார்ச்சு 14, 15 ஏப்ரல் 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் வந்து நிறையும். மார்ச்சு 30உ வாகனம், பசு பால் பிராப்தியை யளிக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் நல்லஞானம் தரும். புதிய கண்டு பிடிப்புகளில் மகிழ்ச்சியளிக்கும். எல்லாக் காரியங் களிலும் ஜெயானு கூலங்களை உண்டு பண்ணும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 16 17 ஏப்ரல் 12 இத் தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிர பலநக நடக்கும். பண வருமானம் பெருமதிப்பில் வரவாகிக்கொண்டிருக்கும். மார்ச்சு 25உ

அளவில் அரசாங்கத் தொடர்பு விஷயங்களில் நல்லன ஏற்பட்டு வரும். ஏப்ரல் 4 தேதியில் மந்த ஸ்திதியில் இருந்த ஓர்விஷயத்தில் வெற்றியை ஏற்படுத்தும். ஜீவனோபாயங்களில் நல்லன ஏற்பட்டுக் கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் ஜீவனோபாயத் தொழில் உத்தி யோகங்களில் புகழும் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். ஏப்ரல் 2 ஆம் தேதியானல் மனஸ்தாபத்தில் பிரிந்திருந்த ஒருவர் வந்து கூடுவர். ஓர் தீ விபத்தினின்றும தப்பித்தல் அல்லது பொருள்சேதம் வராமல் தடுத்தல் ஆகும். எல்லாவற்றிலும் தெய்வ பலம் முன்னின்று காக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 20, 11 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ - சுவாதி -விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கெடியான தோரணைக்கு ஏற்ப வரவாகும். சகோதரர் புத்திரர்களுக்கு நல்ல சௌகரியங்களை உண்டு பண்ணும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் மார்ச்சு 25 தேதியானல் முன்னேற்றமும் எழுத்து மூலங்களில் அரசாங்க நன்மைகளும் ஏற்படும். வழக்கு வெல்லும். ஓர் திரண்ட பொருள் வருதல், ஸ்திரி சொத்து தஸ்தா வேஜுகளில் நல்லன ஏற்படுதல் ஆகும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தான தர்மத்துடன் நடக்கும். மார்ச்சு 22, 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் – கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலன் நடக்கும். பண வருமானங்கள்வரும். புத்திமதி கூறுதல் அல்லது நெறி முறைகளைக் கடைபிடிக்க வற்புறுத்தலினின்றும் சமூகத்தினர் மனக்கசப்புறுவர், ஏப்ரல் 2 தேதி அளவில் மறைமுக சத்துரு அனுசரித்துக் கூடுவர். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடக்கும். வீட்டில் நவீனப் பொருள்வாங்குதல், மங்கல நிகழ்ச்சி ஏற்படுதல் ஆகும். தாரபுத்திரர் களின் நலம் நன்ருக இருந்து வரும். மார்ச்சு 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுப பலன் தரும். பண வருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் எழுத்து மூல விஷயங்களில் மார்ச்சு 23உ முதல் அனுகூலங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். ஓர் நீண்ட கால ஒப்பந்தம் செய்யும். ஓர் நவீன பொருளின்பிராப்தியை அளிக்கும். எல்லாக்காரியங்களும் சிறப்பாக நடந்து கொண்டிருக்கும். மார்ச்சு 27, 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். 6, 7 தேதிகளில் ஓர் சுபச்செலவை எற்கும். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வரும் அடிக்கடி நெருக்கடியான சம்பவங்களும் செலவும் ஏற்படும். சனிக்கிரக பிரீதி செய்தல் நலம். மனைவி புத்திரர் புத்திரிகளுக்கு நல்ல ஏற்பாடுகளைச் செய்ய முஸ்தீப்பு காணும். இறைவன் அருளால் எல்லாக் காரியங்களும் நன் முறையில் நடக்கும். ஏப்ரல் 8, 9 தேதிகளில் அவசிய செலவினங்கள் ஏற்படும். மார்ச்சு 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் கனிசமாக வந்துகொண்டிருக்கும். பொன்மணி பூஷணதிகள் தரும். எழுத்துமூல விஷயங்களில் மார்ச்சு 25க்கு மேல் விசேஷ நன்மைகளை ஏற்படுத்தித்தரும். சகோதரருக்கு நன்மையில், பூஸ்திதியில், ஜீவன முயற்சியில் ஓரளவு பணம முடங்கும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஏப்ரலில் புதிய வாகனம் வாங்குதல் ஆகும் ஏப்ரல் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். அடிக்கடி தவிர்க்க இயலாத செலவினமும் ஏற்படும். மார்ச்சு 30உ அளவில் ஓர் ஆபரணம் தரும். ஏப்ரல் 11இல் வித்துவத்தில் நல்ல பிரயோஜனமும் மேலிடத்தில் வெகுமதிகளும் வாழ்த்துச் செய்திகளும் வரும். புத்திரர் புத்திரிகள் கல்விகலைகளில் சிறப்புறுவர். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தான தர்மத்துடன் நடந்துவரும். ஏப்ரல் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம் செவ்வாய், புதன் சுபம்.

பண்டார சாத்திரங்கள் :

சொக்கநாத வெண்பா

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பிஎச். டி.,

திருக்கயிலாய பரம்பரையில் மெய்கண்டார் மற்றும், அவர் வழிவந்த ஞானாசிரியர்கள் பலரும், சிறந்த சைவசித்தாந்த சாத்திர நூல்கள் பலவற்றை அருளிச்செய்தவர்கள். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள், பதினொரு நூல்கள் சந்தானாசாரியர் சிலரால் இயற்றப்பெற்றன. மறைஞான சம்பந்தர் நூல் ஏதும் செய்திலர்[1]. உமாபதி சிவத்திற்குப் பின் அடுத்தடுத்து வந்த ஞானாசிரியர் எண்மருள் நூல் செய்தார் மூவர்[2]. இம்மரபில் கமலை ஞானப்பிரகாசரின் மாணாக்கராகவிளங்கித் தருமபுர ஆதீனத்தைத் தோற்றுவித்த குருஞானசம்பந்தர் அருளிய நூல்கள் எட்டு.[3] இவரும், இவரது வழிவந்த அருளாளர்களும், இவர்களிடம் ஞானோபதேசம் பெற்ற திருக்கூட்டத்து அடியார்களும் அருளிய நூல்கள்பல; இவற்றை ஆதீன அருள் நூல்கள் என்பர். இவற்றைப் பண்டார சாத்திரம் என்று கூறுதல் வழக்கம். சாத்திரம், தோத்திரம், புராணம், பிரபந்தம், கண்டனம் எனப்பலவகையாக இவை அமைந்தன.

பல்வகை நூல்கள் :

தமிழகத்தின் சைவ சித்தாந்த மெய்ப்பொருள் வளர்ச்சி வரலாற்றில், முடிமணி நூலாகத் திகழ்வது மெய்கண்டாரின் சிவஞானபோதம் ஆகும். சிவஞான சித்தியார் தொடங்கிப் பலராலும் இயற்றப்பெற்ற ஞான நூல்கள் பலவும், சிவஞான போதச் செம்பொருளை ஏதேனும் ஒரு வகையில் விளக்குவன வாகவே அமைந்தன. தருமை ஆதீன அருள் நூல்கள் பலவும் இந் நோக்கில் எழுந்தனவே; குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பல தனித் தன்மை இவற்றிற்கு உள. தமிழ்ச் சிற்றிலக்கிய வரலாற்றில் புதிய இலக்கிய வகைகள் சில தோன்றுவதற்கு இவை உதவின.

திருக்கயிலாய பரம்பரைக்கே உரிய யோகநெறியை [4] ஒரு நூல் விளக்குகின்றது. எளிமையும் கொண்ட அரிய தோத்திர வடிவங்களைச் சில நூல்கள் வழங்கியுள்ளன. ஆதீன அருள்நூல்களின் சாத்திரத் தோத்திரக் கூறுகளும், தனித்தன்மைகளும், சமய இலக்கிய வரலாற்றில் இவை பெறும் சிறப்பிடம் முதலியனவும் முறையாக ஆய்தற்குரியன. இவ்வாய்வு, தருமை ஆதீனத் தமிழ் வளர்ச்சிப் பணிகளை மதிப்பிட்டறியப் பெரிதும் துணைபுரியும்.

குருஞானசம்பந்தர் அட்டகம் :

ஆதீன அருள் நூல்களுள், ஆதீனக் குருமுதல்வர் அருளிய ஞான நூல்கள் தனிச்சிறப்பின. 'பண்டார சாத்திரம் முதல் தொகுதி' என்ற பெயரில் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியாரின் முன்னுரையோடு கி. பி. 1948 இல் தருமை ஆதீன வெளியீடாக வந்த நூலில் குருஞானசம்பந்தர் அருளிய எட்டு நூல்கள் இடம் பெற்றுள்ளன [5]. இவை 1. சிவபோகசாரம், 2. சொக்கநாத வெண்பா, 3. முத்திநிச்சயம், 4. திரிபதார்த்த ரூபாதி தசகாரியஅகவல், 5. சோடசகலாப் பிரசாத சட்கம், 6. சொக்கநாதக் கலித்துறை, 7. பண்டாரக் கலித்துறை என்னும் ஞானப்பிரகாசமாலை, 8. நவரத்தினமாலை என்பன. கி. பி. 1971இல் இவற்றைச் சித்திரப்பட விளக்கங்களுடன் 'குருஞானசம்பந்தர் அட்டகம்' என்ற பெயரில் திரு. சி. அருணைவடிவேல் முதலியாரின் ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு இவ்வாதீனம் வெளியிட்டுள்ளது [6]. இவற்றுள் சொக்கநாத வெண்பா, சொக்கநாதக் கலித்துறை, பண்டாரக் கலித்துறை, நவரத்தின மாலை எனும் நான்கும் தோத்திர நூல்கள் [7]. சிவபோகசாரம், முத்தி நிச்சயம், திரி பதார்த்த ரூபாதி தசகாரிய அகவல் எனும் மூன்றும் சித்தாந்த சாத்திரங்கள். சோடசகலாப் பிரசாத சட்கம் யோக நூலாகும். இவற்றுள் வெண்பா, கட்டளைக்கலித்துறை, அகவல், எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகிய யாப்புகள் பயின்றுள்ளன. இவ்வெட்டு நூல்களில் மொத்தப் பாடல் தொகை 321. சில ஏடுகளில் மட்டும் காணப்படுவனவாகிய சிவபோகசாரம் மிகைப்பாடல்கள்5, சொக்கநாத வெண்பா மிகைப்பாடல்கள்-7, முத்திநிச்சயம் சிலப்பிரதிகளில் காணப்படுவனவாகிய மிகைப்பாடல்கள்-6, இவற்றையும் சேர்த்தால் பாடல்தொகை 339. [8]

சொக்கநாத வெண்பா :

குருஞானசம்பந்தர் அருளிய சிவதோத்திர நூல்கள் இரண்டு. குருதோத்திர நூல்கள் இரண்டு. சொக்கநாத வெண்பாவும் சொக்கநாதக் கலித்துறையும் சிவதோத்திரங்கள், ஞானப்பிரகாச மாலையும், நவரத்தின மாலையும், குருதோத்திரங்கள். "கண்ணுக்கு

இனிய பொருளாக" மதுரைப் பொற்றாமரைக் குளத்தில் தமது கரத்தில் எழுந்தருளிய பெருமானை மதுரையிலும், திருவாரூரிலும், தருமையிலும் தாம் பூசித்த காலங்களில் குருஞானசம்பந்தர் துதித்துப்போற்றிய நூறுநேரிசைவெண்பாக்களின் தொகுப்பிற்கே 'சொக்கநாதவெண்பா' எனப்பெயர் சூட்டப்பெற்றுள்ளது. ஆனால் தருமபுர ஆதீனத்தார் கி. பி. 1948 இல் வெளியிட்ட பண்டார சாத்திரம் முதல் தொகுதியில் 94 வெண்பாக்களே காணப்படு கின்றன. இவற்றிற்குத் திரு. ப. மு. சோமசுந்தரம் பிள்ளையின் ஆங்கிலமொழிபெயர்ப்பும் இப்பதிப்பில்உள்ளது [9]. கி. பி. 1971இல் வெளிவந்த 'குருஞானசம்பந்தர் அட்டகம்' என்ற ஆதீன வெளியீட்டில் 'தனிப்பாடல்கள்' என்ற தலைப்பில் 'சொக்கநாத வெண்பாவின் சிலபிரதிகளில் காணப்படுவன' என்ற குறிப்போடு 7 வெண்பாக்கள் அச்சிடப் பெற்றுள்ளன. இவற்றுள் இறுதி வெண்பாவான 'தண்டு வரும்' என்று தொடங்கும் வெண்பா இந் நூற்கு உரியதல்ல என்பது அதனைப்படிப்போர்க்கு உடன் விளங்கித் தோன்றும் [10]. எஞ்சிய ஆறு வெண்பாக்களும் சொக்கநாத வெண்பாப் பாடல்களே. இவற்றைத் தனிப்பாடல் என்று வேறு படுத்த அடிப்படை ஏதுமில்லை. எனவே, இவற்றையும் இணைத்தால் சொக்கநாத வெண்பா 100 நேரிசை வெண்பாக்களைக் கொண்ட சிறந்த தோத்திரமாக நிறையும்.

திருவிளையாடல் செய்திகள் :

சொக்கநாத வெண்பாவின் 100 பாடல்களுள் 88 பாடல்கள் 'சொக்கநாதா' என்றே முடிகின்றன. எஞ்சிய பன்னிரண்டு பாடல்கள் பல்வேறு முடிபுகளைக் கொண்டுள்ளன. வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில் இவை பாடப்பெற்றன வாதலின் பாடல்களின் பொருள் தொடர்புகளும், பொருளமைதி யும் வெவ்வேறாகவே அமைந்துள்ளன. மதுரையில் சிவபெருமான் நிகழ்த்தியதாகத் 'திருவிளையாடல் புராணம்' விரித்துரைக்கும் வரலாறுகளில், பஞ்சமாபாதகம் தீர்த்தமை (5) சுந்தர பாண்டியனாக மதுரையை ஆண்டமை (7, 65) எல்லாம்வல்ல சித்தராய் வந்தமை (8, 66, 79) கால்மாறி ஆடியமை (44) பன்றியாய் வந்து பால் கொடுத்தமை (57) பழிக்கஞ்சியமை(94) அங்கம் வெட்டியமை (தனிப்பாடல்-3) போன்ற ஏழு செய்திகள் சொக்கநாத வெண்பாவில் இடம் பெற்றுள்ளன. மதுரை சொக்க நாதனின் அளப்பருங்கருணை, எல்லை காணமாட்டாத பேராற்றல், விருப்பு வெறுப்பற்ற திருவுள்ளம், உலகுக்கெல்லாம் தலைவனாகும் முதன்மை போன்ற பல்வேறு சிறப்பியல்களை இந்நூலில் பல்வேறு விளிகளால் முன்னிலைப்படுத்தி ஆசிரியர் போற்றுகின்றார். இத்தகு

விளிகள் 39 இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. இவை தமிழ் மற்றும் வடமொழிச் சொற்களாக அமைந்தன [11].

உவமைகள் ; சொல்லாட்சிகள் :

இறைவன் திருவருளையும், வினைவலிமையையும் உலகியல் கண்ணோட்டத்துடன் விரித்துரைக்கும் வண்ணம் இவ்வாசிரியர் எடுத்தாண்ட உவமைகள்பல, சாத்திர நோக்கில் அமைந்துள்ளன.

' வறிஞர்தமை ஒக்கவைக்கும் மன்னர் போல் ' (6)

' எரிசுடுவ தல்லால் இரும்பு சுடுமோ ' (14)

' ஓர் புருடன் காதல் கொண்டான் போல் ' (19)

' எவ்விதையை மாக்கள் பயிர்இட்டார் இட்டவரே
அவ்விதையின் போகம் அருந்துதல் போல் ' (52)

இத்தகு அரிய உவமைகளோடு, இந்நூலில் வரும் சொல்லாட்சிகள் பல புதியனவாக உள்ளன. நன்மை - தின்மை; நலம் - பொலம்; நன்கு - திங்கு; நன்று - தீது என்பன அறிந்த எதிர்மறைகள். இந் நூலுள்

' எல்லார் கருத்தும் இதமா உரைக்கறியேன்
நல்லாங்கு தீங்கிதென நாடறியேன் ' (53)

எனவரும் 'நல்லாங்கு' என்பது புதிய சொல்லாட்சியாகும். பொல்லாங்கு என்பதன் மறுசொல்லாக இச்சொல் ஆளப் பட்டுள்ளது. இதுவன்றி மலச்சோறு (18) பரதேசி (64) தன்மதுரை (65) சிங்காரித்து (92) போன்ற சொல்லாட்சிகளும், பூரணம் (2) சட்டர் (4) பேசானுபூதி (9) ஆசா பசாசை (9) சிற்பரானந்தா (9) தற்பரா (9) சுகபூரணம் (16) தன்னியா (18) சிரகரா (63) போன்ற வடசொல் மற்றும் சொற்றொடர்களும் இந்நூலில் காணப்படுகின்றன.

சாத்திரக் குறிப்புக்கள் :

உலகினர் செய்பிழைகளைத் தன்மேலேற்றித் தன்னிலை இரக்க மாகப் பாடுதல் திருமுறை ஆசிரியர்களிடம் காணப்படுவது. வாழையடி வாழையாக வரும் இந்நெறியில் வந்த குருஞான சம்பந்தர் பாடல்களில், தன்னிலை இரக்கத் தொடர்கள் பல உள. இவை எளிமையாகவும், இனிமையாகவும், சைவ - சித்தாந்த உண்மைகளை உணர்த்தும் திறத்தனவாகும்.

' என்னால் உனை அடைய வல்லேன் எனில் இடரில்
இந்நாள் அளவும் இருப்பனோ ' (7)

'உயிர்கள், இறைவன் திருவருள் துணையின்றித் தாமே பதிப் பொருளைச் சென்றடைதல் கூடாது' என்பதனை இத்தொடர் விளக்குகின்றது.

' இறந்தும் பிறந்தும் இளைத்தேன் இனியான்
மறந்தும் பிறவா வரம்தா ' (10)

என்பதனால், 'உயிர்கள் பெறத்தக்க பெரும்பேறு மீண்டும் பிறவாமையே' என்பது விளக்கப்பட்டுள்ளது

' எப்போது மும்மலம்விட் டேறுவேன் பூரணமாய்
எப்போதுன் இன்பசுகத் தெய்துவேன் ' (12)

'ஆணவக்கட்டுள் கிடக்கும் உயிர்கள், அதனைத் தகர்த்துக் கரை யேறி, அருட்கடலாகத் திகழும் இறைவன் கருணையிலே மூழ்கும் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளவே இப்பிறப்பு வாய்த் துள்ளது' என்பதை நினைவூட்டும் அரிய தொடர் இது. இவ்வாறான சாத்திர நோக்குடைய பகுதிகள் மேலும் பல இந்நூலுள் விரவி யுள்ளன [12].

யாக்கையை இகழ்தல் :

உயிர் வளர்ச்சிக்கு உடலோம்புதல் பெரிதும் வேண்டுவது என்பர் திருமூலர் [13]. என்றாலும், அஃதொன்றையே குறிக் கோளாய்க் கொண்டு மற்றவற்றை மறந்து திருவருள் நாட்ட மிலராய் வாழ்வாரை இழித்துரைக்க அருளாளர்கள் தவறவில்லை. யாக்கை நிலையாதது என்ற உணர்விலராய், அதனை ஓம்புவதையே வாழ்வாகக் கருதும்உலகினரைக் குருஞானசம்பந்தர் சொக்கநாத வெண்பாவில் பல்வேறிடங்களில் கடிந்து கொள்கிறார். இறைவனை அழகுசெய்து கண்டு மகிழாமல், தம்மையே அலங்கரித்துத் திரிவாரைத் தெருட்டுவான் வேண்டி,

' உன்னைச் சிங்காரித்து உனதழகு பாராமல்
என்னைச் சிங்காரித்து இடர்ப்பட்டேன் ' (92)

எனப் பேசுகின்றார். பின் வந்த தாயுமானார் தம் பாடல்களில் பல விடங்களில் யாக்கை மேல் கொண்டிருக்கும் மனிதர் மோகத்தைப் பழித்துரைக்கின்றார்.

'மின்னனைய பொய்யுடலை மெய்யென்று நம்பி ஐயோ
நின்னை மறக்கை நெறியோ பராபரமே' (814)

என்றாற்போன்று பல தொடர்களில் யாக்கை நிலையாமையைக் குறித்துக்காட்டி அவர் இடித்துரைத்துள்ளமை காணலாம்.

யாக்கையின் இழிவை இவ்வாசிரியர் 'புன்கட்டு தோல்' (2) 'காக்கைநரி ஞாளி கழுகு பருந்துக்கு இரையாம் யாக்கை' (4) 'அருவருப்பே மெத்தியிடும் ஆகம்' (23) 'துஞ்சப் பிணமென்னச் சுற்றத்தார் இட்டத்தார் அஞ்சச் சலிக்க அருவருக்க - கொஞ்ச முற வந்த தனு' (83) 'தேகாதி எல்லாம் சடம் பிணம் - பொய்' (85) என்றெல்லாம் வரும் தொடர்களால் அறிவுறுத்துகின்றார். தேகாபிமானமும், உலக மோகாபிமானமும் உடையார்க்குத் திருவருள் கூடாது என்பதனை,

'மோகாபி மானமின்னும் முற்றும் மறக்கவில்லை
தேகாபி மானம் சிதையவில்லை — ஒகோ
உனையடைந்தும் பாசம் ஒழியவில்லை கூடல்
தனையடைந்த சொக்கநா தா' (43)

என விளக்குதல் சிறப்பாக அமைகிறது [14].

இனிய பாடல்கள் :

சொக்கநாத வெண்பாவில் இடம்பெற்றுள்ள பாடல்கள் அனைத்துமே இனியன. சிலபாடல்கள் என்றும் நெஞ்சில் நிறைவன-சில மறவாது போற்றத் தக்கன.

'பேரன்பன் அல்லன்; பிழைசெய்யான் தானல்லன்
ஓரன்பும் இல்லா உலுத்தனேன் — பேரன்பு
காட்டியெனைக் காட்டியுனைக் காட்டியின்பத் தொட்டிலிலே
ஆட்டிவளர் சொக்கநா தா' (48)

என்ற இனிய வேண்டுகோளும் [15],

'ஆறுதலை இல்லை அடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலர்இல்லை — வேறெனக்குத்
திக்காரும் இல்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேநின் தாளே துணை' (100)

என்ற இறைவன் அருள் நாட்டமும் [16],

'நீரிலே மூழ்கினுமென் நித்தமருச் சிக்கிலுமென்
பாரிலே சுற்றிப் பணியிலுமென் - வேரிலே
உற்றிருந்தா லன்றோ உயிர்க்குறுதி ஒன்றிரண்டும்
அற்றவனே சொக்கநா தா' 17

என்ற தற்சோதனை வெளிப்பாடும் நினைவுகூரத்தக்கன. இவ்வாறு ஆதீன அருள் நூல்களுள் சிறந்தவழிபாட்டு நூலாகச் 'சொக்கநாத வெண்பா' திகழ்கிறது.

சான்றெண் விளக்கம்

1. சதமணிக்கோவை என்ற ஒரு நூல் இவரால் செய்யப் பட்டது என்பர். மு. அருணசலம், (தமிழ்ப் புலவர் வரலாறு - 6; ஸ்ரீ குருஞானசம்பந்தர், பக்-51) சி. அருணைவடிவேல் முதலியார் இக்கருத்தை உடன்பட்டிலர். (சித்தாந்தத் தெளிவியல்: பக். 26)

2. காழி. பழுதை கட்டிச் சிற்றம்பல நாடிகள் (துகளறு போதம் முதலியன) காழி. பழுதை கட்டிச் சம்பந்த முனிவர் (சிவானந்தமாலை முதலியன) கமலை ஞானப்பிரகாசர் (சிவபூசை அகவல் முதலியன) ஆகிய மூவர்.

3. தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள 'சிவபூசா பத்ததி' என்ற அச்சிடப்படாத உரைநடை நூல் ஒன்றைக் குருஞான சம்பந்தர் இயற்றியதாகக் கூறுவர். மு. அருணசலம் (தமிழ்ப் புலவர் வரலாறு - 6: ஸ்ரீ குருஞானசம்பந்தர் பக். 47, 48)

4. 'பிராசாத யோகம்' என்று இதனைக் குறிப்பர். இதனை விளக்கும் நான்கு நூல்கள் உண்டு. இவை 'பிராசாத நான்மணிகள்' எனவழங்கப்பெறும். தருமை ஆதீனம் இவற்றைத் தொகுத்து அச்சிட்டுள்ளது.

5. தருமை ஆதீன வெளியீடு, எண். 160; கி. பி. 1948.

6. தருமை ஆதீன வெளியீடு, எண், 626; கி. பி. 1971.

7. சொக்கநாத வெண்பா, சொக்கநாதக் கலித்துறை இரண்டும் சிவதோத்திரங்கள், ஞானப்பிரகாச மாலையும், நவரத்தினமாலையும் குருதோத்திரங்கள்.

8. மு. அருணசலம் பாடல்தொகை 334 எனக் குறித்துள்ளார். (தமிழ்ப் புலவர் வரிசை - 6; ஸ்ரீ குருஞானசம்பந்தர்: பக். 18) இது பிழை. அவர் குறிக்கும் தருமை ஆதீன வெளியீட்டில் (எண். 626 1971) 339 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

9. பாடல் கருத்துக்கள் பெரும்பாலான பகுதிக்கு ஆங்கிலத்தில் உரைநடையாகவும், சில பாடல்களுக்கு மட்டும் கவிதை நடையிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

10. இதில் வரும் 'குண்டு வரும்' என்ற தொடர் வெடி மருந்துகள் போர்களில், ப்பயன்படுத்தப்பட்ட காலத்ததாகத் தெரிகிறது. இரண்டாம் அடியில் வெண்பா தளை பிறழ்ந்து வருகிறது.

11. இரா. செல்வக்கணபதி 'சொக்கநாத வெண்பாவில் காணப்பெறும் சிவபெருமான் பற்றிய விளிகள்': ஞானசம்பந்தம் மலர் - 36, இதழ் - 1, பக். 31 - 35.

12. சொக்கநாத வெண்பா: பாடல்-14,26,62.

13. திருமந்திரம்: பாடல்-724, 725.

14. சொக்கநாத வெண்பா: பாடல்-43.

15. சொக்கநாத வெண்பா: பாடல்-68.

16. சொக்கநாத வெண்பா: பாடல்-94.

17. சொக்கநாத வெண்பா: பாடல்-75.

பங்குனி மாதச் சிறப்பு நாட்கள்

14—3—88 திங்கள், ஷடசீதி புண்ணியகாலம். திருவையாறு மாதப்

15—3—88 செவ்வாய், பிரதோஷம். [பிறப்பு தீர்த்தம்.

16—3—88 புதன், மாதசிவராத்திரி. ஸ்ரீ தண்டியடிகள் குருபூஜை.

17—3—88 வியாழன், சர்வ அமாவாசை.

18—3—88 வெள்ளி, யுகாதிப் பண்டிகை. தெலுங்கு வருடப் பிறப்பு. வசந்த நவராத்திரி ஆரம்பம். சூரிய கிரஹணம்.

22—3—88 செவ்வாய், கிருத்திகைவிரதம். வேளூர்கிருத்திகை. தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

23—3—88 புதன், திருவையாறு ஸ்ரீபஞ்சநதீசுவரசுவாமிக்கு சம்வத்ஸர அபிஷேகம். வேளூர், திருபுவனம், திருவையாறு முதலிய தலங்களில் பங்குனி உத்திரப்பெருவிழா ஆரம்பம். ஸ்ரீ நேச நாயனார் குருபூஜை.

24—3—88 வியாழன், தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவரசுவாமிக்கு சம்வத்ஸராபிஷேகம்.

25—3—88 வெள்ளி, திருக்கற்குடி ஸ்ரீ உஜ்ஜீவநாதசுவாமி சம்வத்ஸர அபிஷேகம். திருவையாறு அந்தணர்புரத்தில் திருநந்தி தேவர் ஜனனம். இரவு (திருவாதிரை) பட்டாபிஷேகம். ஸ்ரீ கணநாத நாயனார் குருபூஜை.

26—3—88 சனி, ஸ்ரீ ராம நவமி. வசந்த நவராத்திரிவிழா பூர்த்தி. திருவையாறு, திருமழபாடியில் ஸ்ரீ நந்திதேவர்க்குத் திருக் கல்யாணம். (புனர்வசு).

27—3—88 ஞாயிறு, பங்குனி உத்திரப் பெருவிழாவில் சகோபுர ரிஷப வாகனக் காட்சி. வேளூரில் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமி ஸ்ரீ பாலாம்பிகை உடனுகிய ஸ்ரீ வைத்தியநாத சுவாமியைப் பூஜித்துப் பூச்செண்டு பெறுதல். ஸ்ரீ முனை யடுவார் நாயனார் குருபூஜை.

29—3—88 செவ்வாய், ஆயில்ய விழா, பங்குனி உத்திரத் திருத்தேர்.

1—4—88 வெள்ளி, பங்குனி உத்திரம், வேளூர், திருவையாறு, திருபுவனம் முதலிய தலங்களில் பங்குனி உத்திர உருத்திர பாத தீர்த்தம். திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி ஸ்ரீ பிரகந்நாயகி அம்பாளுக்குச் சிவபஞ்சாக்ஷர உபதேசக் காட்சி. இரவு ரிஷப வாகனக் காட்சி. தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் விபவ வருஷத்திய குருபூஜை விழாவின் திருமுகம் ஒப்பமிட்டுப் பூஜையில் வைத்தருளல்.

2—4—88 சனி, பௌர்ணமி விரத பூஜையில் தயிரபிஷேகம். திருநின்றியூர் ஸ்ரீ லட்சுமிபுரீசுவர சுவாமிக்கும், திருமுல்லை வாயில் ஸ்ரீ முல்லைவனநாத சுவாமிக்கும் சம்வத்ஸர

3—4—88 ஞாயிறு, திருபுவனம் ஸ்ரீ சரபர் உற்சவம். [அபிஷேகம்.

5—4—88 செவ்வாய், சங்கடஹரசதுர்த்தி. ஸ்ரீ காரைக்காலம்மையார் குருபூஜை

6—4—88 புதன், சீகாழி ஸ்ரீ பிரமபுரீசுவரருக்கு சம்வத்ஸராபிஷேகம்.

7—4—88 வியாழன், தருமை ஆதீனம் 21 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.

9—4—88 சனி. காலாஷ்டமி.

11—4—88 திங்கள், வேளூர் சர்வப் பிராயச்சித்தாபிஷேகம். இரவு ஸ்ரீ பஞ்சமூர்த்திகளும் புறப்பாடு.

13—4—88 புதன், விபவஹூ சித்திரைமீ 1௳ தமிழ் வருடப் பிறப்பு விஷுபுண்யகாலம், நிம்பகுசுமபக்ஷணம். புதுப் பஞ்சாங்க படனம். திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம்.

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம்

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்

தமிழ் வெளியீடுகள் விபரம்

1. பதிக் கொள்கை — ரூ. 15—00
   [1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 84.
   அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி) — ரூ. 2—30

2. பசுக் கொள்கை — ரூ. 10—00
   [1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 66.
   அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி) — ரூ. 2—30

3. பாசக் கொள்கை — ரூ. 15—00
   [1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 63.
   அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி) — ரூ. 2—30

4. சைவ சமயக் கல்வி I — ரூ. 15—00
   [1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 96.
   அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி) — ரூ. 2—60

5. சைவ சமயக் கல்வி II — ரூ. 20—00
   [1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 112.
   அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி) — ரூ. 2—60

6. சைவ சமயக் கல்வி III — ரூ. 10—00
   [1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 108.
   அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி) — ரூ. 2—60

7. கிரணாகமம் (ஞானபாதம்) — ரூ. 15—00
   [1×16] டபுள் டிம்மி அளவு. பக்கம் 58.
   அஞ்சல் செலவு (ரெக்கார்டட் டெலிவரி) — ரூ. 2—30

இயக்குநர்,
அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை – 609 001,
தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram,
at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10—3—88.